பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

பொலிஸில் 28,000 வெற்றிடம்!
விரிவு பக்:- 03

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 224

புதன்கிழமை
09 ஜூலை 2025

ஆனி 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை

செம்மணிப் புதைகுழி விடயத்தில்

## நீதிமன்ற உத்தரவுக்கமையவே விசாரணைகள் இடம்பெறும்!

அரசாங்கத்தின் நிலைப்பாடு இதுவே
அமைச்சர் நளிந்த உறுதி!



கொழும்பு, ஜூலை 9

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் நீதிமன்றம் வழங்கும் உத்தரவுக்கு அமைய உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். 06

## முழங்கால் மடங்கிய நிலையில் செம்மணியில் என்புத்தொகுதி!



யாழ்ப்பாணம், ஜூலை 9
யாழ்ப்பாணம் - செம்மணிப் புதைகுழியில் முழங்கால் மடங்கிய நிலையில் என்புத்தொகுதியொன்று நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.
கைகள் முன்பாக மடக்கப்பட்ட நிலையில் முழங்கால் மடங்கிய நிலையில் உள்ள 15



செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில்

## புதிய தடயவியல் ஆய்வுத்தளமாக இரண்டாவது புதைகுழி பிரகடனம்!

யாழ்ப்பாணம், ஜூலை 9
யாழ்ப்பாணம் செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில், அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள இரண்டாவது புதைகுழி யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தால், புதிய தடயவியல் ஆய்வுத் 06

## செம்மணிப் புதைகுழியில் மேலும் 4 என்புத்தொகுதிகள்!

யாழ்ப்பாணம், ஜூலை 9
யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று இடம்பெற்ற அகழ்வு நடவடிக்கையின் போது, மேலும் நான்கு என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்படி செம்மணி மனிதப் புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகளின் மொத்த 15

போருக்குப் பின்னர் இடம்பெற்ற

## 10 காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள்; அரசாங்கம் தொடர்ச்சியான விசாரணை

கொழும்பு, ஜூலை 9
போருக்கு பின்னர் வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற 10 காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன. அவை இன்னும் நிறைவுபெறவில்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால 06

காணாமலாக்கப்பட்ட லலித், குகன்

## விசாரணைகள் மீள ஆரம்பம்!

அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 9
அரசியல் செயற்பாட்டாளர்களான லலித், குகன் ஆகியோர் காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் மீளவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே முன்னெடுக்கப்பட்ட விசாரணை 15

பிரபாகரனை கண்டுபிடித்த நாட்டில்

## செவ்வந்தியைப் பிடிக்க திணறுகின்றது அரசு!

சாமர சம்பத் எம்.பி. விசனம்

கொழும்பு, ஜூலை 9
பிரபாகரனையே கண்டுபிடித்த நாட்டில், செவ்வந்தியைக் கண்டுபிடிக்க முடியாதுள்ளது. முடிந்தால் 30 நாள்களுக்குள் அவரை கைது செய்யவும் இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு சவால் விடுத்துள்ளார் நாடாளுமன்ற 15

## பொலிஸாருக்குச் சொந்தமான டிப்பர்களிலும் மணல் கடத்தல்

ஆளுநரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 9
வடக்கு மாகாணத்தில், பொலிஸாருக்குச் சொந்தமான டிப்பர்களிலும் சட்டவிரோதமாக மணல் கடத்தப்படுகின்றது என்று வடக்கு மாகாண ஆளுநரிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 15
(இ-ள)

## பொலிஸ் சீருடையில் 'ரிக்ரொக்'; இளைஞருக்கு விளக்கமறியல்!

மன்னார், ஜூலை 9
பொலிஸ் சீருடை அணிந்து சமூக வலைத்தளமான 'ரிக்ரொக்'கில் வீடியோ வெளியிட்ட இளைஞரை, ஜூலை மாதம் 22ஆம் திகதிவரை 15

ஓமந்தை அரசகாணியில்

## விகாரை அமைக்கும் முயற்சி மக்களால் தடுத்து நிறுத்தம்!

பொலிஸார் தொடர்ந்தும் அடாவடி

வவுனியா, ஜூலை 9
ஓமந்தை பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் உள்ள அரச காணிக்குள், ஓமந்தை பொலிஸார் அத்துமீறிச் சென்று துப்புரவு செய்து அதில் விகாரை அமைக்க மேற்கொண்ட முயற்சி பொதுமக்களால் நேற்றுத் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.
ஏ9 வீதியில் ஓமந்தை பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் தனியார் உரிமை கோரிவரும் அரச காணி ஒன்றினை பொலிஸார் துப்புரவு செய்து 15



## நாகபூஷணிக்கு இன்று தேர்!

யாழ்., ஜூலை 9
வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த் திருவிழா இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் மிக 15

முச்சந்தி முரளி

'செவ்வந்தியையே பிடிக்கமுடியாதவை செம்மணியில கொலைசெய்தவையை எப்பிடி பிடிப்பினம்?'

## தேனெடுக்கச் சென்றவர் சடலமாக நேற்று மீட்பு!

கிளிநொச்சி, ஜூலை 9
கிளிநொச்சி - குமாரசாமிபுரம் பகுதியில், தேன் எடுப்பதற்காகச் சென்ற நபர் மரத்திலிருந்து தவறி வீழ்ந்த நிலையில் உயிரிழந்துள்ளார். 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




| கொவிசெத | |
|---|---|
| திகதி | 08.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4126 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 15 40 59 72 |
| விசேட எழுத்து | W |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 08.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1193 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 33 40 42 62 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 08.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0152 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 2 8 3 1 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 08.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2232 |
| ஆங்கில எழுத்து | N |
| சுப்பர் இலக்கம் | 03 |
| வெற்றி இலக்கங்கள் | 15 21 34 73 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 08.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5884 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 1 6 2 4 3 0 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 08.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1914 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 16 24 31 38 |
| விசேட எழுத்து | J |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 08.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0459 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 2 4 3 0 |

## இலங்கையில்

# 2027ஆம் ஆண்டில் சொத்துவரி அறிமுகம்

**கொழும்பு, ஜூலை 9**

**இலங்கையில் 2027ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் சொத்துவரி ஒன்றை அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.**

சர்வதேச நாணயநிதியம் சமீபத்தில் இலங்கை தொடர்பாக வெளியிட்ட தனது ஊழியர்மட்ட அறிக்கையில் இந்த விடயம் குறித்து அறிவித்துள்ளது.

இந்தப் புதிய சொத்துவரியை விதிப்பதற்குத் தேவையான அடிப்படை நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், தரவு சேகரிப்புப் பணிகளில் சிறிது தாமதம் இருந்தபோதிலும், செப்ரெம்பர் மாதத்துக்குள் அந்தப் பணிகள் முடிவடையும் என சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

சொத்துகளின் மதிப்பை மதிப்பீடு செய்வதற்கும் வரி கணக்கிடுவதற்கும் டிஜிற்றல் தரவு முறைமை ஒன்று உருவாக்கப்படவுள்ளதுடன், 2026ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் அதற்குத் தேவையான அனைத்துத் தரவுகளும் தயாரிக்கப்படவேண்டும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2027 ஆம் ஆண்டில் இந்தப் புதியவரியை நடைமுறைப்படுத்துவதற்குச் சொத்துவரி விதிப்புமுறைகள் குறித்து ஒருங்கிணைந்த கலந்துரையாடல்கள் அவசியம் எனச் சர்வதேச நாணயநிதியம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 08.07.2025 | செவ்வாய்க்கிழமை | 0592 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| J | 5 0 2 7 8 0 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 08.07.2025 | செவ்வாய்க்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2858 | S | 06 48 70 79 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 08.07.2025 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| T | 01 17 40 51 | 5019 |

| SASIRI | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 08.07.2025 | செவ்வாய்க்கிழமை | |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் | |
| 0721 | 05 31 32 | |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 08.07.2025 | செவ்வாய்க்கிழமை | |
| கடகம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| ♋ | 02 03 36 48 | 4570 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 08.07.2025 | செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| P | 17 | 08 37 44 67 | 2034 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 08.07.2025 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Q | 12 13 20 35 | 2684 |

## தாதியர் ஓய்வு வயதை குறைப்பதால் ஆபத்து

கொழும்பு, ஜூலை 9

தாதியர்களின் கட்டாய ஓய்வு வயதை 60 ஆகக் குறைப்பதால் எதிர்காலத்தில் பல சிக்கல்கள் ஏற்படக்கூடும் என்று பொதுச்சேவை ஐக்கிய செவிலியர் சங்கம் எச்சரித்துள்ளது.

ஓய்வூதிய வயதைக் குறைப்பதால் தற்போதுள்ள தாதியர் பற்றாக்குறை மேலும் மோசமடையும் என்று அந்தச் சங்கத்தின் தலைவர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தாதியர் அதிகாரிகளின் கட்டாய ஓய்வு வயதை 63ஆக நீட்டித்த மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து சுகாதார அமைச்சு உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளது. இந்த வழக்கு முடியும்வரை மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை நிறுத்திவைக்க உயர் நீதிமன்றம் கடந்த மார்ச் மாதம் 6ஆம் திகதி உத்தரவிட்டது.

அதன்படி 60 வயதைப் பூர்த்திசெய்த அனைத்துத் தாதியர் அதிகாரிகளும் ஓய்வுபெறவேண்டும் என்று சுகாதார அமைச்சின் செயலாளர் கடந்த 4ஆம் திகதி சுற்றறிக்கை வெளியிட்டுள்ளார்.

அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே முருத்தெட்டுவே ஆனந்த தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ-இ)


## தையிட்டியில் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்தை உடனடியாக அகற்றக் கோரியும், அதனைச் சூழவுள்ள தமிழ்மக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகளை மீளவும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வலியுறுத்தியும் பாதிக்கப்பட்ட மக்களுடன் இணைந்து தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி நடத்தும் கவனவீர்ப்புப் போராட்டம் இன்று புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் குறித்த விகாரைக்கு அருகில் மீண்டும் ஆரம்பமாகி மாலை 6.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

பூரணை தினமான நாளை வியாழக்கிழமை காலை 06.30 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெறும்.

இந்தப் போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரையும் கலந்துகொள்ளுமாறு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் கேட்டுள்ளார். (ச-66)



## 2029 ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ச வேட்பாளர்

### மொட்டுக்கட்சி கூறுகின்றது

கொழும்பு, ஜூலை 9

2029ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் அறிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2029ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் ஊடாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவோம். நாட்டைப் பொறுப்பேற்பதற்குத் தகுதியான இளம் தலைவராக நாமல் ராஜபக்ச திகழ்கின்றார். அவரே எமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்.

பொய்கூறி ஆட்சியைப் பிடித்தாலும் பொய்கூறி ஆட்சியை நடத்தமுடியாத நிலை தேசிய மக்கள் சக்திக்கு ஏற்பட்டுள்ளது.

மொட்டுக் கட்சியின் வாக்குகளே தேசிய மக்கள் சக்திக்குச் சென்றன. அடுத்த தேர்தலில் எம்மால் வெல்லமுடியும் - என்றார். (எ-44)

## விவசாயிகளுக்கு மீண்டும் ஓய்வூதியம்

கொழும்பு, ஜூலை 9

ஓய்வூதியம் இழந்த விவசாயிகளுக்கான ஓய்வூதியத்தை இந்த மாதம் முதல் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விவசாயக் காப்புறுதிசபை தெரிவித்துள்ளது.

விவசாய சமூகத்தினர் முன்வைத்த கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விவசாய ஓய்வூதியம் பெறுவதற்காக 75 சதவீதத்துக்கும் அதிகமான தவணைத் தொகையைச் செலுத்திய விவசாயிகளுக்கு, சம்பந்தப்பட்ட கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு தவணைத் தொகைக்கு இணையான வீதத் தொகையை ஓய்வூதியமாகப் பெறும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2012-2013 காலப்பகுதியில் விவசாய ஓய்வூதிய நிதியத்துக்கு ஏற்பட்ட தாக்கம் காரணமாக, ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

இந்த நிலையில் தற்போது விவசாயிகளுக்கு மீண்டும் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை அடகு சேவை
வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளது
1 பவுண் 22 கரட்டிற்கு
220000/-
அடகுக்காலம் ஒரு வருடம்
இல. 59 ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி சந்தைக்கு அருகில்
021 221 7287, 076 636 1238


# டிஜிற்றல் சேவைக்கு ஒக்ரோபர் முதல் வரி




கொழும்பு, ஜூலை 9

இலங்கையில் வழங்கப்படும் டிஜிற்றல் சேவைகளுக்கு வற்வரி விதிக்கப்படவுள்ளது. எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி நடைமுறைக்குவரும் வகையில் இந்த வரி விதிக்கப்பட்டுள்ளது என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புதிய டிஜிற்றல் சேவை வரி தொடர்பான வழிகாட்டுதல்களை கடந்த முதலாம் திகதி உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வெளியிட்டிருந்தது. அதற்கமைய இலங்கையில் நபர் ஒருவருக்கு மின்னணுத் தளம்மூலம் சேவைகளை வழங்கும் வெளிநாட்டினரும் டிஜிற்றல் சேவைகளுக்கு வரி செலுத்தவேண்டும். கடந்த 12 மாதங்களில் 60 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான சேவைகளை வழங்கியவர்கள் அல்லது கடந்த காலாண்டில் 15 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான சேவைகளை வழங்கியவர்கள் வற்வரிக்குப் பதிவுசெய்வது கட்டாயமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# பொலிஸில் 28,000 வெற்றிடங்கள்

கொழும்பு, ஜூலை 9

பொலிஸ் பிரிவில் தற்போது 28 ஆயிரம் வெற்றிடங்கள் உள்ளன என்று பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். பொலிஸ் சேவையில் 5,000 வெற்றிடங்களுக்கு அவசரமாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்குத் தற்போது விண்ணப்பங்கள் பெறப்பட்டுவருகின்றன. 5 ஆயிரம் கீழ்நிலை பொலிஸ் அதிகாரிகளுக்குப் பதவியுயர்வு வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# ஜூன் மாதத்தில் கையிருப்பு வீழ்ச்சி

கொழும்பு, ஜூலை 9

இலங்கை மத்திய வங்கியின் வாராந்திர பொருளாதார சுட்டெண் அறிக்கைக்கு அமைய, 2025 ஜூன் மாதத்துக்கான உத்தியோகபூர்வ கையிருப்புச் சொத்துகளின் பெறுமதி 6,080 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது. 2025 மே மாதத்தில் இந்தப் பெறுமதி 6,286 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியிருந்தது.

கடந்த ஜூன் மாதத்துக்குள் உத்தியோகபூர்வ கையிருப்புச் சொத்துகளின் பெறுமதி 3.3 சதவீதத்தால் அதாவது 206 மில்லியன் அமெரிக்க டொலரால் வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# உயிரைப் பறித்த ரம்புட்டான்

கொழும்பு, ஜூலை 9

ரம்புட்டான் விதை தொண்டையில் சிக்கி ஐந்து வயது சிறுவன் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். இந்தச் துயரச் சம்பவம் நேற்றுமுன்தினம் அம்பாந்தோட்டை மித்தெனிய, பல்லேயில் உள்ள ஜுலம்பிட்டியப் பகுதியில் நடந்துள்ளது. (ச-இ)




## தலையா? கடல் அலையா?

அருகினில் கூடிய கூட்டங்கள், தலையா கடல் அலையா? என்டொரு பாட்டுவரியைக் கேட்டிருப்பீங்கள். திருச்செந்தூர் முருகன் கோயில் சூரன்போருக்கு வந்த பக்தர்களைப் பற்றி சீர்காழி கோவிந்தராஜனும், சௌந்தரராஜனும் சேர்ந்து படிச்ச 'திருச்செந்தூரின் கடலோரத்தில்' பாட்டில வாற வரியள்தான் இது. ஒருகாலத்தில திருச்செந்தூரில அதுவும் சூரன்போர் நடக்கேக்க வாற சனம்தான் கடல்மாதிரி இருந்தது. இப்ப ஒவ்வொரு நாளும் யாழ்ப்பாணம் நல்லூரில இருந்து ரவுண் மட்டும் ஒரு ரவுண்டடிச்சுக்கொண்டு வந்தால் அடிக்கடி அருகினில் கூடிய கூட்டங்கள், தலையா கடல் அலையா? எண்டு பாடிக்கொண்டே வருவீங்கள். நல்லூர்க்கோயில் தண்ணிப்பந்தலுக்கு நிக்கிறமாதிரி எல்லா ரியூசனுக்கு முன்னாலையும் எப்பவும் சனக்கூட்டத்துக்கு குறைவேயில்லை. ரியூசன் எண்டால் உள்ளுக்கபோய்ப் படிக்கவேண்டியதுதானே, எதுக்கு றோட்டில நிக்கினம் எண்டு நினைப்பீங்கள். இப்பிடி றோட்டில கடல்மாதிரி நிக்கிறது பிள்ளையள் இல்லை. அவையின்ர தாய் தகப்பன் தான்.

முந்தின காலத்தில பிள்ளையள் ரியூசனுக்கு எங்க போகுதுகள் எண்டே பெற்றோருக்குத்தெரியாது. புத்தகங்களோட பிள்ளையள் வெளிக்கிட்டுத் தங்கடபாட்டில போய்வந்ததுகள். ஆனால் இப்ப சிஸ்டமே மாறிப்போட்டுது. கோழி தன்ர முட்டையை அடைகாக்கேக்ககூட இப்பிடி இருந்திருக்காது. அந்தளவுக்குப் பிள்ளையளை வெளியுலகம் தெரியாமல் பொத்திப் பொத்தி வளர்க்கிறதை இப்ப பெற்றோர் பெருமையா நினைக்கினம். பிள்ளை பள்ளிக்கூடத்துக்குப் போனாலென்ன, ரியூசனுக்குப் போனாலென்ன இப்ப பெற்றோரார்தான் கொண்டுபோய் விட்டிட்டு, ஏத்திக் கொண்டும் வருகினம். பள்ளிக்கூடமெண்டால் காலமை கொண்டுபோய் விட்டிட்டு வீட்டை வந்திடுவினம். பிறகு மத்தியானம் தங்கட லஞ்ச் ரைமில பறந்துபோய், பிள்ளையளை ஏத்திக்கொண்டுவந்து, தாங்களும் அரக்கப்பரக்க நாலுவாய் சாப்பிட்டுட்டு, பிள்ளையளை வெளிக்கிடுத்தி ரியூசனுக்கு முன்னால இறக்கிப்போட்டு வந்திடுவினம். பிறகு வேலைமுடிய போய் ரியூசன் வாசலில தவங்கிடக்கத் தொடங்கிவிடுவினம். வேலைக்குப் போகாத பெற்றோர் பிள்ளையளைக் கொண்டந்து இறக்கிப்போட்டு, கிளாஸ் முடியும் மட்டும் வாசலைவிட்டு அரக்காமல் அங்கேயே நிண்டு பக்கத்தில நிக்கிறவையோட அலம்பத் தொடங்கிடுவினம்.

முதலில றோட்டுக்கரையில நிண்டு கதைக்கத் தொடங்கினவை கூட்டம் கூடிக்கொண்டே போக நடுறோட்டுவரைக்கும் வந்திடுவினம். அதுவும் மோட்டர்சைக்கிள்களோட நிண்டால் அதால எப்பிடிச் சனம் போய்வர ஏலும்? ரியூசன் முடிஞ்சு அவையள் போகும் வரைக்கும் அந்த இடத்தைக் கடக்கிறதே பெரும்பாடுதான். சனங்கள் அப்பிடி இப்பிடி எண்டு வாகனங்களை வெட்டியெடுத்துத்தான் போய்வரவேணும். றோட்டில போய் வாறவைக்கு நாங்கள் இடைஞ்சலா நிக்கிறமே எண்டு பெற்றோரும் யோசிக்கிறேலை, இப்பிடிப் பிள்ளையள் வருமட்டும் காவல் இருக்கிற பெற்றோருக்கு சைக்கிள் பார்க் மாதிரி ஒரு வெய்ட்டிங் பார்க் வசதி செய்துகுடுக்கோணும் எண்டு ரியூசன் காரரும் யோசிக்கிறேலை. அந்த றோட்டால போய்வாற அப்பாவிப்பொதுசனங்கள், தாங்கள் செய்யாத குற்றத்துக்காக பாம்பு மாதிரி நெளிஞ்சு வளைஞ்சு போய்வரவேண்டிக் கிடக்கு. பொலிஸ்காரர்கூட உதுகளைக் கவனிக்கிறேலை. யாழ்ப்பாணம் ரவுனுக்க போக்குவரத்து நெரிசல் எண்டு புலம்பிறம். இப்பிடி ரியூசனுக்கு முன்னால வீங்கிக் கிடக்கிற பலூன்மாதிரி பெருத்துக்கொண்டே போற 'காவல் தெய்வங்களை' சீராக்கி றோட்டின்ர ரண்டு கரையிலையும் நிக்கவைச்சாலே அரைவாசிப் போக்குவரத்து நெரிசல் இல்லாமல் போடும் கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. இன்று குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் காணப்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாக முடியும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சுபநிகழ்ச்சிகளுக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக் காக செலவு செய்ய நேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், வெளியில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகக்கூடும்.

**கன்னி:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும். உறவினர்களுடன் கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமை அவசியம்.

**துலாம்:** மகிழ்ச்சி தரும் நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கக்கூடும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. வியாபாரத்தில் சக வியாபாரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**தனுசு:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**மகரம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**கும்பம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதைக் கொடுப்பீர்கள்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத் துணையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து, திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் ஊடாக நடாத்தும்

## தமிழ்ப் பாலபண்டிதர் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி - 2024/ 2025(அணி - II)

தமிழ்ப் பாலபண்டிதர் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்**

விண்ணப்பதாரி கீழ்வரும் தகைமைகளில் ஏதாவது ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினது தமிழ்ப் பாலபண்டிதர் தகைமைக்கான பிரவேச பரீட்சையிற் சித்தி பெற்றிருத்தல்.

**அல்லது**

2. சைவப் புலவர் அல்லது சைவசித்தாந்த பண்டிதராயிருத்தல்.

**அல்லது**

3. க.பொ.த உயர்தரப்பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் தமிழ் மொழிப்பாடத்தில் திறமைச் சித்தி (C) பெற்றிருத்தல்.
4. க.பொ.த உயர்தரபரீட்சையில் எந்தவொரு பாடத்துறையிலாயினும் பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெறுவதற்கான தகுதி பெற்றிருத்தல்.

**அல்லது**

5. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அல்லது தேசிய கல்வியியற் கல்லூரி முதலான அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது நிறுவனம் ஒன்றில் பயிற்றப்பட்ட ஆசிரியராயிருத்தல்.

**கற்கைநெறிக்கான காலம்** - ஒரு வருடம் (இரண்டு பருவங்கள்)
**கற்கைநெறி மூலம்** - வார இறுதி நாட்களில் நேரடி வகுப்புக்கள்
**விண்ணப்படிவம்** - ரூபா 200.00

**விண்ணப்பிக்கும் முறை**

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் இணையத்தளத்தில் (www.codl.jfn.ac.lk) பதிவினை மேற்கொள்ள முடியும். எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் (89002278003288) எனும் வங்கி கணக்கிலக்கத்திற்கு விண்ணப்ப கட்டணமாக 200.00 ரூபாவினை செலுத்தி அதன் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியினை இணையத்தள முகவரியில் பதிவேற்றம் செய்யப்படுவதுடன் விண்ணப்பத்தின் மூலப்பிரதியை நேரடியாக அல்லது தபால் மூலமாக "சிரேட உதவிப்பதிவாளர் இதிறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்இயாழ்.பல்கலைக்கழகம்இதிருநெல்வேலி" எனும் முகவரிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பபடிவங்களின் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தமிழ்ப் பாலபண்டிதர் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி - 2024/2025 (அணி-II)" எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

**விண்ணப்பமுடிவுத் திகதி 24.07.2025**

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி**

## MUNICIPAL COUNCIL, JAFFNA
## INVITATION FOR BIDS
### Procurement of Electronic Goods & Computer Items

1. The Chairman Regional Procurement Committee (RPC) on behalf of Municipal Council, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders as in the table below:
2. Bidding will be conducted through National Competitive Bidding.
3. Interested eligible bidders may obtain further information from Mayor/Commissioner, Jaffna Municipal Council. TP: 021 222 8874, Fax: 021 222 2334 E-Mail: mcjaffnamailc@yahoo.com office hours from 09:00 hrs. to 15:00 hrs.
4. In these quotations are limited suitable business or company registrations and shall not include black list tenders. Additional details are provided in the bidding document.
5. A complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders from the address given below from 9th July **2025 until 22nd July 2025 from 09:00 hrs. to 14:00 hrs.** on the submission of a written application and upon a payment of non-refundable fee of Rs.2000.00. The payment method will be paid by cash or bank draft drawn in favor of Commissioner, **Jaffna Municipal Council.**
6. Bids must be delivered to the address given below on or before **23rd July 2025 at 11.00 hrs.** Bid number must be written on the top of envelop. Late bids will be rejected. Immediately after closing of bids will be opened in the presence of the bidders' representatives' who choose to attend at the address given below. **All bids must be accompanied by a bid security and the validity periods of bid security are given in table below.**
7. A pre bid meeting will be held at Jaffna Municipal Council, Point Pedro Road, Jaffna on **15th July 2025** at 10:00 hrs., interested bidders may participate in this meeting their own expenses.
8. The address referred to above is **Chairman, Procurement Committee, Jaffna Municipal Council, Point Pedro Road, Nallur, Jaffna.** The Bid Name & No must be mentioned on the top of the envelop. The bid will be sent in post/ in courier service or shall be deposited in the bid box in the above address.

| No | Bid Name & No. | Name of the Item | Estimated Amount (Without VAT) Rs. million | Period of Contract | Bid Validity Period | Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Amount | Required Period |
| 01 | JMC/PMD/02/ Desktop Computers with UPS & Laptops - 2025 | Procurement for Supplying of 10 Nos of Desktop Computers with UPS & 03 Nos of Laptops – 2025 | 3.6 | 30 days | 49 days | 50,000.00 | 07.10.2025 |
| 02 | JMC/PMD/02/ Smart Panel | Procurement for Supplying of 02 Nos. of Smart Panel with all accessories -2025 | 2.0 | 30 days | 49 days | 25,000.00 | 07.10.2025 |
| 03 | JMC/PMD/02/ Photocopier & 65`` Smart TV - 2025 | Procurement for Supplying of 01 No of Photocopier & 02 No of 65`` Smart TV – 2025 | 1.4 | 30 days | 49 days | 20,000.00 | 07.10.2025 |

Chairman,
Regional Procurement Committee,
Municipal Council, Point Pedro Road,
Nallur, Jaffna
09.07.2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# இன்னும் மாறாத போக்கு

'மகாவலி அதிகாரசபையை நீக்குவதற்கு அனுமதிக்கக்கூடாது 'என்று மகாநாயக்க தேரர்களிடம் ஒற்றையாட்சி மற்றும் படையினரை பாதுகாப்பதற்கான அமைப்பின் பிரதிநிதிகள் கோரிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றனர். அதற்கு அந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் கூறியிருக்கும் காரணம், வடக்கு, கிழக்கில் உள்ள காணிகளில் 40 சதவீதமானவை மகாவலி அதிகாரசபையின் வசம் உள்ளன என்பதும், மகாவலி அதிகாரசபையை நீக்கினால் அந்தக் காணிகள் தமிழர்களிடம் சென்றுவிடும் என்பதும்தான். உண்மைகளை மறைத்து, இனவாதம், மதவாதத்தைக் கிளப்பி குளிர்காய நினைக்கும் இவ்வாறான இனவாதக் குழுக்கள் நிச்சயம் நாட்டுக்குள் சாபக்கேடானவை.

வடக்கு, கிழக்கு மக்களின் காணிகள் திட்டமிட்ட வகையில் அரச திணைக்களங்களால் சூறையாடப்பட்டேவருகின்றன. அவற்றில் பிரதானமானவை மகாவலி அதிகாரசபை, வனவளத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் என்பனதான். மகாவலி அதிகாரசபையால் தமிழ் எல்லைக் கிராமங்கள் கையகப்படுத்தப்பட்டு, திட்டமிட்ட வகையில் பெரும்பான்மையினத்தவர்களுக்கு அவை பகிரப்படுகின்றன. அதைப் போன்று வனவளத் திணைக்களம் போரால் இடம்பெயர்ந்துள்ள மக்களின் காணிகளை கையகப்படுத்தி அந்தக் காணிகளில் மக்கள் மீள்குடியமர்வதைத் தடுத்துவருகின்றது. தொல்லியல் திணைக்களமும் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை - வழிபாட்டிடங்களை கையகப்படுத்தி அவற்றைத்திட்டமிட்டு பௌத்தமாயமாக்கிவருகின்றது.

சுருக்கச் சொல்வதானால் மகாவலி அதிகாரசபை உட்பட இந்தத் திணைக்களங்கள் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களைத் திட்டமிட்டுக் கையகப்படுத்தித் தமிழ்மக்களின் இனப்பரம்பலை ஐதாக்கி, சிங்கள மக்களின் பரவுகைக்கு வழிசெய்யும் வகையிலேயே செயற்படுகின்றன என்று கூறலாம். தமிழ் மக்களின் இனப்பரம்பலை மாற்றியமைக்கக்கூடிய பாரதூரமான செயற்பாடுகளில் ஈடுபடும் இந்தத் திணைக்களங்கள், நாட்டின் சட்டவாட்சியைக் கூடக் கேள்விக்குட்படுத்தி தங்கள் திட்டமிட்ட செயற்பாடுகளைமுன்னெடுத்துவருகின்றன. இவ்வாறான இனவாத நோக்கிலான செயற்பாடுகளுக்கு எதிராகத் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்புகளைப் பதிவுசெய்துவருகின்றபோதும், அரசாங்கத்தின் மறைகர ஆதரவுடன் தமிழ் மக்களின் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் செயற்பாடுகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. நாட்டின் சிறுபான்மையினருக்கு இழைக்கப்படும் அநீதியை நியாயப்படுத்தும் தெற்கு இனவாதிகளின் போக்கால் நாடு போருக்குள் சிக்கி, பொருளாதாரத்தில் நலிந்து அதலபாதாளத்துக்குள் வீழ்ந்துள்ளபோதும், இன்னமும் தெற்கு இனவாதிகளின் எண்ணங்களில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை என்பதையே மகாநாயக்க தேரர்களிடம் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை புலப்படுத்துகின்றது. இனவாதத்தை - மதவாதத்தைக் கையிலெடுத்து மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை மறைத்துக் குளிர்காயும் போக்கில் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தமுடியும். ஆட்சியில் இருப்பவர்களும், பௌத்த மதத்தின் உயர் அதிகாரத்தில் இருப்பவர்களும் அதை உய்த்துணர்ந்து இவ்வாறான இனவாதிகளுக்கும், மதவாதிகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதை எப்போது நிறுத்துகின்றார்களோ அப்போதுதான் இந்த நாட்டுக்கு விடிவு கிட்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


நாளொரு நல்வார்த்தை

மன உறுதி மட்டும் இருந்தால் போதாது,
அந்த உறுதியைப் போலவே செயல் ஊக்கத்துடன் கூடிய
உழைப்பும் சேர்ந்தால்தான் வெற்றிக்கு வழிவகுக்கும்.

–ஷெல்லி –




## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி



*ஜனாதிபதி அநுர உறுதி*

**கொழும்பு, ஜூலை 9**

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தை நிலைநாட்ட அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பு உயர் மறைமாவட்ட ஆயர், பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் குருத்துவப் பணிவாழ்வின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பு பேராயர் இல்லத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த கௌரவிப்பு விழாவில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். கால ஓட்டத்தில் மூடிமறைக்க இடமளிக்காது உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தை நிலைநாட்ட அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

இது அரசாங்கம் மற்றும் அரசாங்கத்துக்குள் இருந்து ஆராயப்பட வேண்டிய ஒரு சவால். எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் இந்த விடயத்தில்நியாயம்நிலைநாட்டப்பட வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (எ-44)

## 1,967 துப்பாக்கிகள் மீட்பு

கொழும்பு, ஜூலை 9

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களாலும், ஏனைய குழுக்களாலும் பயன்படுத்தப்பட்ட ஆயிரத்து 967 துப்பாக்கிகள் இதுவரை கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு செப்ரெம்பர் 21ஆம் திகதி முதல் கடந்த ஜூலை மாதம் 3ஆம் திகதிவரையான காலப்பகுதியில் இந்தத் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## துமிந்தவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 9

முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க உள்ளிட்ட மூவரை எதிர்வரும் 15ஆம் திகதிவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிஸை நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பில் உள்ள சொகுசு தொடர்மாடிக் குடியிருப்பு ஒன்றில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த காரில் இருந்த பெண்ணிடம் இருந்து தங்கமுலாம் பூசப்பட்ட ரி -56 ரக துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க கைதுசெய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## தரமற்ற தடுப்பூசிகள் இறக்குமதி: கெஹலியவுக்கு அழைப்பாணை

கொழும்பு, ஜூலை 9

தரமற்ற நோய் எதிர்ப்புத் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்தமை தொடர்பாக சட்டமா அதிபர் தாக்கல் செய்துள்ள வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உட்பட 12 பேரை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு விசேட மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் நேற்றுமுன்தினம் அழைப்பாணை பிறப்பித்துள்ளது. சட்டமா அதிபரால் முன்வைக்கப்பட்ட குற்றப்பத்திரிகையை பரிசீலனை செய்தநீதியரசர்களானமஹேறன் வீரமன், பிரதீப் அபேரத்ன மற்றும் அமாலி ரணவீர ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. அன்றையதினம் சந்தேக நபர்களுக்கு எதிராகக் குற்றப் பத்திரிகை கையளிக்கப்படவுள்ளது. இந்த வழக்கில் முன்னாள் ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க மற்றும் நான்கு முன்னாள் அமைச்சர்களையும் முறைப்பாட்டுத் தரப்பு சாட்சிகளாகப் பெயரிட சட்டமா அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார். (எ-இ)

நாளை
வியாழக்கிழமை - ஆனி 26
10.07.2025
சுபநேரம் : 07.28- 08.58
ராகுகாலம் :01.28- 02.58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கட்டாக்காலி கால்நடைகளின் இருப்பிடமான மைதானம்

## வடமராட்சி கிழக்கு மக்கள் விசனம்

கிளிநொச்சி, ஜூலை 9

வடமராட்சி கிழக்கு பொதுமைதானம் கட்டாக்காலி மாடுகளின் வாழ்விடமாக மாறியுள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

உரிய பராமரிப்பு இன்றியும் ஒரு பக்க வேலியற்றும் காணப்படும் இந்த மைதானத்தில் நாளாந்தம் பெருமளவான மாடுகள் படுத்துறங்குகின்றன. இதனால் பொதுமைதானத்தில் விளையாட்டு வீரர்கள் பயிற்சிகளை மேற்கொள்ளமுடியாத நிலை கடந்த பல வருடங்களாகக் காணப்படுகின்றது. இதுகுறித்து பிரதேச செயலகம் மற்றும் பிரதேசசபையினருக்கு தெரியப்படுத்தியபோதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. எனவே இந்த மைதானத்தை சீர்செய்து பொதுமைதானத்தின் தரத்தைப் பேண உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-27)

# மாநகரசபை, நகரசபைச் சட்டத்தை தமிழில் மொழிபெயர்க்குக

## வடக்கின் உள்ளூராட்சி ஆணையாளரிடம் மனு கையளிப்பு

மாநகரசபை மற்றும் நகரசபைச் சட்டத்தை தமிழில் மொழிபெயர்க்கவேண்டும் என்று வலியுறுத்தி வடக்கின் உள்ளூராட்சி ஆணையாளருக்கு மனுவொன்று கையளிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் வடக்கு மாகாண அமைப்பாளரும் கொழும்பு மாநகரசபையின் உறுப்பினருமான உமாச்சந்திர பிரகாஸ் தெரிவித்துள்ளார். யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

மாநகரசபை மற்றும் நகரசபைச் சட்டத்தை தமிழில் மொழிபெயர்க்கவேண்டும் என நாம் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றோம். இது தமிழ் பேசும் மக்களுக்கான மொழி உரிமையை உறுதிசெய்யும் ஒரு முக்கியமான சட்டமாக இருக்கின்றது. ஆனால் இன்றுவரை அதற்கான தீர்வு கிடைக்காமையால் மீண்டும் இதை வலியுறுத்தி கடித மொன்றை வடக்கின் உள்ளூராட்சி ஆணையாளரிடம் கையளித்துள்ளோம். இது உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளைப் புரிந்து கொள்வதற்கும், அதில் பங்கேற்பதற்கும் உதவும் - என்றார். (ச- 27)



# சாவகச்சேரியைத் தூய்மையாக்கல் நகரசபையால் பணிகள் மும்முரம்

யாழ்ப்பாணம் சாவகச்சேரி நகராட்சிமன்ற நிர்வகிப்புக்குக் கீழுள்ள நகர பேருந்துநிலையம், நவீன சந்தைக் கட்டடம், வடிகால்கள் என்பன கழுவி சுத்தம் செய்யப்பட்டன.

நகரசபைத் தவிசாளர் பிரகாஷின் ஆலோசனைக் கிணங்க பொதுச்சுகாதாரப் பரிசோதகர் குணசாந்தனின் ஒழுங்குபடுத்தலில் உபதவிசாளர் ஞா.கிஷோரின் மேற்பார்வையில் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. எதிர்வரும் நாளகளில் தொடர்ந்தும் இந்தப் பணிகள் நகராட்சிமன்றத்தால் முன்னெடுக்கப்படவுள்ளதாக உபதவிசாளர் ஞா.கிஷோர் தெரிவித்தார். (ச-28-20)

## நீதிமன்ற...

செம்மணி விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணை கோரப்பட்டுவரும் நிலையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:- செம்மணிப் புதைகுழியில் 2025 ஜூலை மாதம் 7ஆம் திகதி வரை 44 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அடுத்த வழக்கு விசாரணை எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதன்போது சம்பந்தப்பட்ட தரப்புகளால் விசாரணை அறிக்கைகள் முன்வைக்கப்படவுள்ளன.

நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றது. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரும் பொலிஸாரும் அதற்காக ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். நீதிமன்றத்தின் தேவைக்கமைய அதற்குரிய விசாரணைகள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும்' - என்றார். (அ-ம-44)

## 10 காணாமலாக்கப்பட்ட...

தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கில் யுத்தத்துக்குப் பிறகு 10 காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில், நான்கு காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரும், 6 காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவை தொடர்பான விசாரணைகள் இன்னும் நிறைவுபெறவில்லை. இதேவேளை, காணாமலாக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகளில் தற்போது அரசியற் தலையீடுகள் இல்லை. விசாரணைகள் வேகப்படுத்தப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-44)

## புதிய...

தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது. சித்துப்பாத்தி மயானத்தில் 'மனிதப் புதைகுழியாக' ஏற்கனவே ஒரு புதைகுழி அடையாளப்படுத்தப்பட்டு அங்கு அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதற்கு அருகிலுள்ள ஒரு பகுதியும் புதைகுழியாக இருக்கலாம் என்ற சந்தேகம் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டு, நீதிமன்ற அனுமதியுடன் ஆய்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பகுதியே யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தால், புதிய தடயவியல் ஆய்வுத் தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## தேனெடுக்கச்...

நேற்றுமுன்தினம் மாலை இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பெருமாள்துரை துரைராசா (வயது-51) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மரத்தால் வீழ்ந்தவர் உறவினர்களால் மீட்கப்பட்டு சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113)


# INVITATION FOR BID 2025/04 VALIKAMAM SOUTH WEST PRADESHIYA SABHA NORTHERN PROVINCE PSDG FUND

1. The Chairman, Local Authority Procurement Committee, on behalf of the Valikamam South West Pradeshiya Sabha, Manipay invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below.

   "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987. The original certificate of registration (PCA 03) shall be submitted with the bid."
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 3 Documents (Works specified in Table below)
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2025-07-09 To 2025-07-23 during 09:00 hrs and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Valikamam South West Pradeshiya Sabha, Manipay (T. P:021-2256647, e.mail: vswps@yahoo.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Local Authority Procurement Committee, Valikamam South west Pradeshiya Sabha, Manipay on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Valikamam south west Pradeshiya Sabha, Manipay as stated in table below.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 2025-07-09 To 2025-07-23 |
| | Pre-Bid Conference | At 10.30 A.M on 2025-07-17 |
| | Closing and Opening of Bids | At 10.30 A.M on 2025-07-24 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(16)/PSDG/2025/01 | Reconstruction of Pattima Road and branch roads (13th Lane) | 8.47 | 60 | C8 or Above (Highway) | 3,500.00 | 85,000.00 | 07.11.2025 | 77 |
| NP/14/41(16)/PSDG/2025/02 | Construction of office Room for Kallundai Waste Management Center | 4.23 | 60 | C8 or Above (Building) | 3,500.00 | 42,500.00 | 10.10.2025 | 49 |

Chairman
Local Authority Procurement Committee,
Valikamam South west Pradeshiya Sabha, Manipay. 09.07.2025


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின்
விற்பனையாளராக கடமையாற்றும்
**சிவலிங்கம் ஜெயந்தன்**
அவர்களின் அன்புத்தந்தை

## இளையதம்பி சிவலிங்கம்

அவர்கள் கடந்த (07.07.2025)
திங்கட்கிழமை காலமானதையிட்டு
ஆழ்ந்த துயரடைவதோடு
அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினர்களுக்கு ஆழதத
இரங்கல்களை
தெரிவித்துக்கொள்கின்றோம்

தோற்றம் 16.11.1948 — மறைவு 07.07.2025

**மைதிலி நகைமடம் (Pvt)ltd**
89V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 7902

**யாழ் மைதிலி ஜுவல்லர்ஸ்**
79Z, செட்டியார் தெரு
கொழும்பு -11
011 239 6239

# மரண அறிவித்தல்

## கமலாலக்சுமி அருளானந்தம்



அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், நல்லூரினை வசிப்பிடமாகவும் கொண்ட கமலாலக்சுமி அருளானந்தம் அவர்கள் நேற்று (08.07.2025) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (ஓய்வு பெற்ற மலாயன் நில அளவையாளர்)-அன்னமுத்து தம்பதியின் பாசமிகு புத்திரியும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் (ஓய்வு பெற்ற காணிப்பதிவாளர், மாவட்ட செயலகம்-யாழ்ப்பாணம்), தனலக்சுமி, விஜயரத்தினம் (ஓய்வு பெற்ற ஜனசவிய பிரதம செயலாளர்), சொர்ணலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அருளானந்தம் (ஓய்வு பெற்ற பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்) அவர்களின் அன்பு மனைவியும், இலக்ஸ்மன் (ஓய்வு பெற்ற பதவிநிலை தொழிநுட்ப உத்தியோகத்தர்.இரசாயனவியற்துறை-யாழ் பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற மேகலா (ஆசிரியை, யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) மற்றும் றஞ்ஜிற் (முன்னாள் மேற்பார்வை உத்தியோகத்தர், மொனரா கம்பனி, கஜசக்தி கம்பனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுகிர்தா (ஆசிரியை, நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்), வசந்தகுமார் (தொழிநுட்ப உத்தியோகத்தர், யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்), சத்தியா (உப அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிசாந் (Quantity Serveyor, Qutar), ஷமிந்தன் (Computer Science and Engineering Final year student NIT Rourkela, India), லதுசன் (யா/இந்துக் கல்லூரி தரம்-9), கஜானன் (Airport Service Agent, United Arab Emirates), சுவஸ்திகா (Financial Engineering Kelani University Final Year Student), திருசிகா (யா/இந்து மகளிர் கல்லூரி-உயர்தரப்பிரிவு) ஆகியோரின் அரவணைப்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, தர்மச்சந்திரன் மற்றும் கணேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2025) புதன்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 21.04.1933 — மறைவு 08.07.2025

**தொடர்புகளுக்கு:**
077 608 6140, 076 707 0966
077 [illegible] 1728
076 977 2879

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு 23 . 04 . 1935



இறப்பு 6 . 07 . 2025

### திரு. சபாபதிப்பிள்ளை தியாகராசா

**(ஓய்வு பெற்ற களஞ்சியப் பொறுப்பதிகாரி விவசாயத்திணைக்களம்)**

கனால் வீதி மாதகலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் டச்சு வீதி சித்தங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை தியாகராசா அவர்கள் கடந்த (06.07.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடேசு-சிவகொழுந்து தம்பதியினரின் மருமகனும், இராஜேஸ்வரியின் அவர்களின் அன்பு கணவரும், மயில்வாகனம் (சிங்கப்பூர்), மகேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், உமாதேவி (ஆசிரியர் uk), அனுஷா (ஆசிரியர் யா/சங்கானை சிவப்பிரகாச ம.வித்தியாலயம்), ஜெயசீலன் (கணக்காளர்), குணசீலன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலகிருஷ்ணன் (Manager NCP), ஈஸ்வரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் யு/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), வித்தியா, நிதிந்துஷா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நிஷாந்தி, நிஷாந்தன், ஆரோன், அஸ்னி, சரவன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.07.2025) வியாழக்கிழமை அன்று காலை 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் போதி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**இல 11 டச்சு வீதி, வட்டு கிழக்கு,
சித்தங்கேணி.**

**தகவல் - குடும்பத்தினர்.
077 078 4975**

## மரண அறிவித்தல்



### நல்லதம்பி சிவலிங்கம் (G.M)

**(முன்னாள் பொது முகாமையாளர் சுன்னாகம் ப.நோ.கூ சங்கம)**

வீரபத்திர கோவிலடி குப்பிழான் வடக்கினை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நல்லதம்பி சிவலிங்கம் அவர்கள் (07.07.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-ஆச்சிமுத்து தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா-ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், கணேசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், நல்லமுத்து, தையல்முத்து, இரத்தினசிங்கம், பவளம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவலோகநாதன், சிவகரன், சிவயோகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பிறேமாஜினி, அனுஷா, நிலோஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும், அருஞ்சிகா, அருணிகா, சிந்து, சயன், சயூரி, சிவன்ஜா, சிவன்ஜன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.07.2025) வியாழக்கிமை 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனகிரியைக்காக குப்பிழான் காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**வீரபத்திரர் கோவிலடி,
குப்பிழான் வடக்கு,
குப்பிழான்.**

**தகவல் :
குடும்பத்தினர்
074 313 7323**

# மரண அறிவித்தல்

## செல்வி சுகுந்தன் பூமிகா



**தோற்றம்** 02.05.2005

**மறைவு** 07.07.2025

காணவாய் திக்கானை குருக்கள் பகுதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சுகுந்தன் பூமிகா அவர்கள் கடந்த (07.07.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுகுந்தன்-தனேஸ்வரி தம்பதியின் ஏக புதல்வியும் மதிசூதனின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற கனகலிங்கம்-செல்வராணி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான கனகசபை-மனோரஞ்சிதம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற இராசதுரை மற்றும் திருப்பதி, இராஜேஸ்வரன், உமாதேவி, பாஸ்கரன், விஜிதா, மதிவதனன், ரஜிதா, முகுந்தன், சுஜிதா (லண்டன்), வசீகரன்-ஊர்ஜிதா, கரன் தீப் சிங் சித்து, நீர்ஜிதா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மருமகளும் கணபதிப்பிள்ளை, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற முகுந்தன் மற்றும் அருந்தவநாயகி, ரகுந்தன், சிவமலர் (கனடா), வைகுந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பெறா மகளும், யசோ, யமுனா, யனதா (பிரான்ஸ்), மிதுலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தங்கையும், மோகனதாஸ், காந்தீஸ், மதிராஜ் (பிரான்ஸ்), கோவிந், ஐங்கரன், அனிதா (கனடா), சிந்துஜா, சோமதா, உமேஸ், கேசியா, சகேசி, கோகிலகிருஷ்ணன், கோகிலறமணன், ஷாருமதன், ஜெயமதன், நர்மதா, ஜனந்தன், பபிஷனா, விக்ரா ஆகியோரின் மைத்துனியும், பவித்திரா, கிஷானி, ஜஸ்விகா, மாதுளன், ஜனனி ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:
குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 27 - 07 - 1962



இறப்பு 12 - 07 - 2022

## அமரர் வடிவேலு பாலசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற - பேணர் (Burner) - சீமெந்து தொழிற்சாலை காங்கேசந்துறை.
உரிமையாளர் - ஜெயசக்தி மருந்தகம் - மருதனார்மடம்)

மூன்றாண்டு நகர்ந்தாலும்
நம்மை விட்டு அகலாது உங்கள்
நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து போகின்றோம்

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந் நாளும் உயிர் வாழும்

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 12.07.2022 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மூன்றாம் ஆண்டு நினைவுநாள் இன்று 09.07.2025 புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வள்ளிமனை,
அல்வொல்லை வீதி,
பருத்தித்துறை

குடும்பத்தினர்
077 191 1062

(CS 58780) E

# விழி நீர்க்காணிக்கை

மண்ணில் 12 . 11 . 1960



விண்ணில் 08 . 07 . 2025

எமது வேரற்கேணி கந்தசாமி ஆலயத்தின்
குருவாகிய சிவஸ்ரீ தெ. சுவேந்திரக் குருக்கள்
அவர்களின் தாயாராகிய
அன்னார்

**தெய்வேந்திரன் குருக்கள்**
**சுபத்திரா தேவி**

மறைந்தவர்கள் எல்லோரும்
மண்ணாவதில்லை ! மாறாக...
மறைந்தும் மறையாத சூரியனாய்
வாழ்பவர்கள் சிலரே...!
அந்த வகையில் அழியாத புகழுடன்
வானுலகு சென்று விட்டீர்கள் !
விழிநீர் சொரிய நாம் அஞ்சலிக்கின்றோம் !

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாரின் துன்பத்தில் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல வேரற்கேணி யான் திருப்பாதங்களை இறைஞ்சி நிற்கும்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

தென் மட்டுவில்,
வேரற்கேணி கந்தசாமி,
ஆலய பரிபாலன சபையினர்.

# வண்ணை வைத்தீஸ்வரர் மஹோற்சவம் சனியன்று

யாழ்ப்பாணம், ஜுலை 9

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான தேவி திவ்விய மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.45மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் 28ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

விசேட நாள்கள் நீங்கலாக மற்றைய தினங்களில் காலை 5.30மணிக்குத் திருவனந்தலும், காலை 6.30மணிக்கு அபிஷேகமும், 7.30மணிக்கு காலைச் சந்தியும், 8மணிக்குத் தம்பபூசையும், 9மணிக்கு வசந்தமண்டபப் பூசையும், 12மணிக்கு உச்சிக்காலமும், 4மணிக்கு சாயரட்டையும், 4.15 மணிக்கு 2ஆம் காலமும், 5 மணிக்கு தம்பபூசையும், 6 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் இடம்பெறவுள்ளன. (ச-41)

# மாவைக்கந்தனுக்கு இன்று திருமஞ்சம்

யாழ்ப்பாணம், ஜுலை 9

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருந் திருவிழாவின் திருமஞ்சத் திருவிழா இன்று புதன்கிழமை இரவு 8 மணியளவில் சிறப்பாக இடம்பெறவுள்ளது. (ச-66)

# மரண அறிவித்தல்

மலர்வு 16 . 01 . 1951



உதிர்வு 07 . 07 . 2025

## தில்லைநாதன் மகேஸ்வரி

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும், மணல்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட தில்லைநாதன் மகேஸ்வரி அவர்கள் (07.07.2025) திங்கட்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தில்லைநாதன் (மாலா) வின் அன்பு மனைவியும், நாகேந்திரம் (பசறை), புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டேராசா, லம்போதிராசா மற்றும் தனபாக்கியம், பூபாலப்பிள்ளை, விசிஜலக்ஸ்மி, காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், குகனேஸ்வரி (லண்டன்), குகநந்தினி (கொழும்பு), குகநேசன் (வவுனியா), சுதன் (Karikalan photography), சுதாகரன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், நகுலேஸ்வரன் (லண்டன்), சதீஸ்குமார் (பிரான்ஸ்), சிவச்செல்வி, ஜனார்த்தனி, திவ்யா ஆகியோரின் அன்பு மாமியும், ரேவிஷா, கர்சினி, வே[illegible]ஹரா, ருக்சனா, கீர்த்திகா, கரிகாலன், காரிகை, கயல்விழி ஆகியோரி[illegible] அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை[illegible] (10.07.2025) வியாழக்கிழமை காலை 07.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இ[illegible]ந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 905 5844

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 12 . 1934



மறைவு 05 . 07 . 2025

## சரஸ் வால்டர் செல்வதுரை (சரஸ் அக்கா)

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் வடக்கை பிறப்பிடமாகவும், நியூஸிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ் வால்டர் செல்வதுரை (சரஸ் அக்கா) அவர்கள் கடந்த (05.07.2025) சனிக்கிழமை மகிமைக்குள் பிரவேசித்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - வெள்ளையம்மா தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான செல்வதுரை - தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற வால்டர் சபாநாயகம் செல்வதுரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம் (மலேஷியா), இரத்தினம்மா (சாவகச்சேரி), மற்றும் கதிர்காமநாதன் (பெரியதம்பி - புன்னாலைக்கட்டுவன்), காலஞ்சென்றவர்களான மன்னவராயன் (சின்த்தம்பி - புன்னாலைக்கட்டுவன்), பாலசுப்பிரமணியம் (தாசன் - கொடிகாமம்) மற்றும் மகேஸ்வரன் [illegible] (Baba - ஹாலந்து) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், உஷா (கனடா), [illegible]னா (சியூசிலாந்து), ஷெரினா (சின்னா - கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இன்பஜோதி, நகுலேசன், ஸ்ரீகந்தராஜா ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், நடராஜா மற்றும் சிவஷாந்தினி (சிவா), செல்லம்மா (கிளி), சிவபாக்கியம் (சிவா), காலஞ்சென்றவர்களான ரீனீ, மணி சின்னத்துரை, காலஞ்சென்ற எல்ஸி, மனோன்மணி குணரட்ணம், காலஞ்சென்ற சாம் செல்வதுரை ஆகியோரின் மைத்துனியும், ஹேமலதா (ஹேமா - மலேசியா) அவர்களின் அன்பு பெரியம்மாவும், விஷ்ணுஹரன் (ஹரன் - புன்னாலைக்கட்டுவன்) அவர்களின் உடன்பிறவா சகோதரியும், ஈனோக், டானியல், நித்யா, ஜொனத்தன், சிப்போரா, ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (09.07.2025) புதன்க்கிழமை இலங்கை நேரப்படி காலை 08.30 மணிக்கு நியூசிலாந்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 370 6130, 076 867 9765

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை

அவநம்பிக்கை பலவீனத்திற்கு வழிவகுக்கிறது; நம்பிக்கை ஆற்றலுக்கு வழிவகுக்கிறது
- வில்லியம் ஜேம்ஸ்

# ஜூலைக் கலவரம்




## இலங்கையின் வரலாற்றையே மாற்றி எழுதிய திருநெல்வேலி

■ ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்

*இலங்கையின் வரலாற்றில் இரத்தக்கறை படிந்த நாள்கள் பல. அவற்றுள் ஒன்றுதான் கறுப்பு ஜூலை. தெற்கில் தமிழர்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்ட சொத்துகள் அழிக்கப்பட்ட வரலாறு அது. அந்தக் கலவரம் இடம்பெற்றது 1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதியன்று.*

*அதைத்தான் பார்க்கப்போகிறோம் இத்தொடரில்...*

புலிகளின் ஆரம்ப காலம் அது. அந்த இயக்கத்தில் குறைந்த எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் குறைந்த எண்ணிக்கையிலான ஆயுதங்கள். இயக்கத்தைப் பெரிதாக்கவேண்டும். அதற்குப் பணம் வேண்டும். ஆயுதங்கள் வேண்டும். உறுப்பினர்கள் வேண்டும்.

என்ன செய்வது...? யோசிக்கிறார்கள் புலிகள். உதிக்கிறது ஒரு திட்டம். அதுதான் இராணுவத்தின் மீதான தாக்குதல், பெரும் தாக்குதல். அதனூடாக வளர்ச்சியடைதல். ஆனால், அதற்கான ஆயுதங்கள் அவர்களிடம் இல்லை. சொற்ப எண்ணிக்கையில்தான் உண்டு. இருந்தாலும், இவற்றை வைத்து முடியுமானவரை ஒரு தாக்குதல். அந்த அடியோடு எழும்பிவிடவேண்டும் எங்கே அடிப்பது ....? எப்படி அடிப்பது...? எப்போது அடிப்பது...? வகுக்கிறார்கள் திட்டம். உதிக்கிறது ஓர் 'ஐடியா'. என்ன அது...??? இரவில் ரோந்து வரும் இராணுவத்தின்மீது தாக்குதல்.

தேடித் திரிகிறார்கள் வாய்ப்பை. கைகூடுகிறது விரைவாக. படையினர் புலிகளைத் தேடி அலையும் காலம் அது. சிறிதாக இருக்கும்போதே நசுக்கிவிடவேண்டும். முளையிலேயே கிள்ளிவிடவேண்டும். அதுதான் படையினரின் திட்டம். இதற்காக மூலைமுடுக்குகள் எல்லாம் ஒவ்வோர் இரவும் ரோந்து. ஒவ்வோர் இரவும் தேடல். அறிகிறார்கள் புலிகள் இதை. இதுதான் சந்தர்ப்பம். அருமையான சந்தர்ப்பம். பயன்படுத்தவேண்டியது தான். இராணுவம் ஒவ்வோர் இரவும் தேடத் தேட... புலிகளும் படையினரின் பின்னால். இவ்வாறு பல நாள்கள் நகர்ந்தன. கைகூடுகிறது ஒரு நாள். அதுதான் அந்த இரவு. ஜூலை 23ஆம் திகதி நள்ளிரவு. இலங்கையின் வரலாற்றையே புரட்டிப்போட்ட இரவு.

மாதகல் முகாமில் இருந்து 15 படையினர் 2 வாகனங்களில் ரோந்துக்குத் தயாராகிறார்கள். இன்று நடக்கப்போகும் விபரீதம் புரியாமல்... பலாலி முகாமுக்குச் சென்று உத்தரவைப் பெற்று பல இடங்களில் தேடுதல். இரவு 12 மணிக்குள் குருநகர் வந்துவிடவேண்டும். இப்போது தேடல் ஆரம்பம். முற்றாக அவதானிக்கிறார்கள் புலிகள்.

எங்கு வைத்துத் தாக்குவது...? எப்படித் தாக்குவது...? தெரிவு செய்கிறார்கள் ஓரிடத்தை. அதுதான் திருநெல்வேலிச் சந்தி. இவ்வழியால்தான் திரும்புவார்கள் படையினர். அப்போதுதான் நடத்தவேண்டும் தாக்குதலை... இப்போது புலிகள் தயார் நிலையில்... படையினர் புலிகளை எங்கெல்லாமோ தேட.. புலிகள் இங்கே...!!! திருநெல்வேலிச் சந்தியில்... இராணுவ வாகனங்கள் இரண்டு, ட்ரக் ஒன்று, ஜீப் ஒன்று. ஜீப்பில் லெப்டினன் வாஸ் குணவர்தன. அவருடன் ஒரு சில சிப்பாய்கள். மிகுதிப் படையினர் ட்ரக்கில்.

விரைகிறார்கள் குருநகர் முகாமுக்கு. இப்போது நெருங்குகிறார்கள் சந்தியை... திருநெல்வேலிச் சந்தியை... இலங்கையின் வரலாற்றையே மாற்றி எழுதப் போகும் சந்தியை... தயார் நிலையில் புலிகள். அத்தனை படையினரையும் போட்டுத் தள்ளுவதற்காக... படையினர் சரியாக சந்தியின் நடுவே வர...செயலில் குதிக்கிறார்கள் புலிகள்.

திடீரென ஒரு சத்தம். குண்டுவெடிப்புச் சத்தம். வந்து வீழ்கிறது குண்டு. படையினரை நோக்கி...

குண்டு என்றால்...??? கைக்குண்டோ கிளைமோரோ அல்ல. காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் சுண்ணக்கல் உடைக்கும் ஒரு கருவி. இச்சம்பவத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்பே அக்கருவியைத் தூக்கிவிட்டார்கள் புலிகள். அதனால் பாரிய சேதத்தை ஏற்படுத்தமுடியாது. சத்தம் மட்டும்தான். சத்தத்தை எழுப்பி படையினரின் வாகனங்களை நிறுத்துதல். அதுதான் திட்டம். அவ்வாறே செய்கிறார்கள். நிலைகுலைகிறார்கள் படையினர் அந்தச் சத்தத்தோடு. சடாரென நிற்கின்றன வாகனங்கள். எதிர்பார்த்ததுபோலவே... சுற்றிவளைக்கிறார்கள் புலிகள். பிறகென்ன.

மழையெனப் பொழிகின்றன வெடிகள். புலிகளின் சொந்தத் தயாரிப்புகள் அவை. புலிகள் வளைத்து வளைத்துத் தாக்க...பதிலுக்கு இராணுவமும் வைத்துப்பிடிக்கிறார்கள் அவர்களின் கணக்கிற்கு. பெரும் போர்க்களம் அங்கு. நெருக்கமான இடம் சுற்றி வீடுகள் கடைகள் கட்டிடங்கள். முதல் நாள் போயா தினம். இதனால் நிறைந்த வெளிச்சம், எல்லாமே தெரிகிறது தெளிவாக...

புலிகள் மறைவில். படையினர் திறந்தவெளியில் சந்தியில். புலிகளுக்கு சாதகமான களம். படையினரோ சிக்கலில் பெரும் ஆபத்தில். இதனால் சமாளிக்கமுடியவில்லை படையினரால். புலிகளை நோக்கிய வெடில்கள் எல்லாம் வீண், சுவற்றிலும் கட்டிடங்களிலும்... ஆனால், புலிகளின் வெடில்கள் எல்லாம் சக்ஸஸ். எல்லாம் படையினர்மீது. இருந்தும், போராடுகிறார்கள் படையினர். சுற்றிச் சுற்றிப் பிடிக்கிறார்கள். புலிகளை நோக்கி... அதிர்கிறது அந்தப் பகுதியே...!!!

நித்திரையில் கிடந்த மக்களோ பதறியடித்து எழுகின்றார்கள். என்ன நடக்கிறது சந்தியில்...? எதுவுமே புரியவில்லை. ஒரே குழப்பம். இவ்வாறே நீண்டநேரம்...!!!

ஒவ்வொன்றாகச் சரிகிறார்கள் படையினர். எல்லோரும் நிலத்தில். இரத்த வெள்ளத்தில். தப்பியவர்கள் இருவர் மட்டுமே. ஒருவர் கோப்ரல் உபாலி பெரேரா. அடுத்தவர் லான்ஸ் கோப்ரல் சுமதிபால. அவர்களுக்கும் காயம். காயமடைந்தவர்கள் தலைமறைவாகினார்கள். இப்போது படையினரிடம் வருகிறார்கள் புலிகள். பிடுங்குகிறார்கள் ஆயுதங்களை. வெளியேறுகிறார்கள். எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு ஆயுதங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு... பதுங்கியபடி பார்த்துக் கொண்டே இருக்கிறார் உபாலி எல்லாவற்றையும். எதுவும் செய்யமுடியாது. எதிர்த்துத் தாக்கவும்முடியாது. தோட்டாக்களும் கொஞ்சமே. புலிகள் சென்றதும் வருகின்றார் இடத்துக்கு. லெப்டினன் வாஸ் குணவர்தன வீழ்ந்து கிடக்கிறார் அவரும். அவர்தான் இந்தக் குழுவுக்குத் தலைமை தாங்கியவர். அவரும் சரி. எதிர்பாரா சம்பவம் அது.

சத்தம் முகாமுக்குக் கேட்டிருந்தால் அறிவிக்கவேண்டியதில்லை. உடனே இராணுவம் வந்திருக்கும். இந்த வெடிச் சத்தங்கள் எவையும் இராணுவ முகாம்களுக்குக் கேட்கவில்லை. ஏன் தெரியுமா...??? அவ்வாறு கேட்காதிருக்க ஒரு யுக்தியைக் கையாள்கிறார்கள் புலிகள். சண்டை நடக்கும்போது கோவில் ஒன்றில் பட்டாசுகளை வெடிக்க வைத்திருந்தனர் புலிகள். இது அவர்களின் ஒரு போர்த்தந்திரம்.

தொலைபேசி இருக்கும் ஓர் இடத்தை நோக்கிச் செல்ல வேண்டும்.அங்கிருந்து முகாமுக்குத் தகவல் கொடுக்க வேண்டும். யோசிக்கிறார் உபாலி. அருகில் தொலைபேசி இருக்கும் இடம் எது...??? நினைவுக்கு வருகிறது ஓரிடம். ஆம்...அது யாழ்.பஸ் டிப்போ. செல்கிறார் அங்கே. ஓட்டமும் நடையுமாக. கால்களில் இருக்கும் வலியோடு... அடைகிறார் டிப்போவை. அழைப்பு எடுக்கிறார் பொலிஸ் நிலையத்துக்கு எத்திவைக்கிறார் தகவலை. உடனே தகவல் பறக்கிறது பலாலி இராணுவ முகாமுக்கு. அந்த பொலிஸ் நிலையத்தில் இருந்து... விரைந்து வருகிறார்கள் இராணுவத்தினர் அந்த டிப்போவுக்கு. லெப்டினன் வீரசிங்கவின் தலைமையில்.

இப்போது அங்கிருந்து சம்பவ இடத்துக்கு. திருநெல்வேலிச் சந்திக்கு. உபாலியையும் கூட்டிக்கொண்டு... போய்ப் பார்க்கிறார்கள். எல்லாம் சரி. எல்லோரும் சரி. 13 இராணுவம் பலி. அடுத்து...??? காயமடைந்த இருவரும் யாழ். மருத்துவமனையில். 13 பேரின் உடல்களும் மறுநாள் கொழும்புக்கு விமானம்மூலம்...

அடுத்து என்ன...???

இனித்தான் கொடூரமே...!!!

பெரும் கொடூரம் தமிழ்மக்கள் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட கொடூரம் சொத்துகள் அழிக்கப்பட்ட கொடூரம். பார்ப்போம் அந்தக் கொடூரங்களை அடுத்தடுத்த தொடர்களில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினாதீவு நாகபூஷணியின்
வருடாந்தத் தேர்த்திருவிழா இன்றாகும்.
இதை முன்னிட்டு இந்தக் கட்டுரை
பிரசுரமாகின்றது.

### அலைகடல் ஆர்ப்பரிக்க

# தேரில் பவனிவருகின்றாள் தெய்வத்தாய் நாகபூஷணி

நயினை நா.க.குமாரசூரியர்
ஜே.பி.

இலங்கையில் வரலாற்று மகிமையும் வழிபாட்டுச் சிறப்பும்கொண்ட, நாற்புற மும் கடலால் சூழப்பட்ட, மணிமேகலைக் காவியத்திலே இடம்பெற்ற சப்த தீவுகளிலே 'மணிபல்லவம்' எனப்படும் தனிப்பெரும் சிறப்புமிக்கது நயினாதீவு. அலைகடல் நடுவே வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற அன்னை பராசக்தி கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பதியும் நயினையம்பதியாகும். சக்தி பீடங்கள் அறுபத்து நான்கினுள் ஒன்றான 'புவனேஸ்வரி பீடம்' என்று அழைக்கப்படுவதும் அன்னையவளின் ஆலயமாகும். ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் ஆலய மூல விக்கிரகத்தின் தோற்றம், வரலாறு என்பன இன்னமும் கண்டறியமுடியாத பேரதிசயமாகவே உள்ளன. முழு நம்பிக்கையோடு வழிபடும் அடியார்களது கவலைகளையும், நோய் பிணிகளையும் நீக்கியருளும் பேரருட் சக்தியாகவே ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் விளங்குகின்றாள்.
அன்னையவளின் ஆலயம் கிழக்கு நோக்கிய 108 அடி உயரமான கோபுரம், அலைகடலில் நீந்தி அருட்கடலை நாடிவரும் அடியார்களைத் தாங்குகின்ற இயற்கைத் தத்துவத்தை வலியுறுத்துகின்றது. அடியார்கள் 'அரோகரா' என்று வந்து கால்பதிக்கின்ற இறங்குதுறை நயினையம்பதிக்கே இயற்கையால் கொடுக்கப்பட்ட நற்றவத்தோற்றமாகும். அன்னை பராசக்தி தன்னை நாடிவருகின்ற பெருந்திரளான அடியார்களின் துன்ப துயரங்களையெல்லாம் தனது அருட்கடாட்சத்தால் நீக்கி நல்லருள் வழங்கிவருகின்றாள். அன்னையின் மணியோசை அகிலமெல்லாம் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது. காலாதிகாலமாக முழு நம்பிக்கையோடு அம்பாளை வழிபட்டு நல்லருளைப் பெற்றவர்கள் பலர். நற்பேறு அடைந்த அடியார்கள் அநேகர். தன்னை வந்து தரிசிக்கும்படி அடியார்களுக்குக் கனவிலும் நனவிலும் நாகபாம்பாகத் தோன்றி அவர்களைத் தன்வசம் ஈர்க்கின்ற அம்பாளின் அற்புதங்கள் பலபல. அம்பாள் உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் தாயானவள். ஆனந்தவல்லியாக அன்பர் என்பவர்க்கு நல்லன எல்லாம் தருபவளாக அன்னை பராசக்தி விளங்குகின்றாள்.
அம்பிகையின் இவ்வருட மஹோற்சவம் கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. இன்று 9ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழா பல்லாயிரக்கணக்கான அடியார்கள் மத்தியில் சிறப்பாக நடைபெறுகின்றது. மஹோற்சவத்தின் சிகரமாக அமைவது தேர்த்திருவிழாவாகும். இன்றைய தேர்த்திருவிழாவன்று நயினையில் வீற்றிருந்து நல்லாட்சிபுரியும் அம்பிகை தேரேறி வந்து எம்மைப் பற்றியுள்ள துன்ப துயரங்களை அகற்றி நல்லருள் தர வருகின்றாள். தேர்த்திருவிழா அற்புதமாகவும், பக்திபூர்வமாகவும் பெரும் விழாவாக நயினையில் கோலாகலமாக நடைபெறுகின்றது.
வெள்ளமெனப் பக்தர்கள் எல்லாம் அம்பிகையின் திருத்தலத்தில் உள்ளம் உருகி வழிபடுகின்ற அருட்காட்சியைத் தேர்த்திருவிழாவன்று காணலாம். மெய்தான் அரும்பி விதிர்விதித்து கைதான் தலைமேல் வைத்து, கண்ணீர் ததும்பி, வெதும்பி, அம்பிகையை அடியார்கள் வழிபடும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். அடியார்களின் 'அரோகரா' ஒலி வானைப் பிளக்கும். ஆலய வீதிகள் எங்ஙணும் சனசமுத்திரமாகவே காணப்படும். ஆனி மாதத்தில் அகிலமெல்லாம் அம்பிகையையின் பேரொளி வீசத் தொடங்கிவிடும். அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய திருத்தேரில் அம்பாள் ஆரோகணித்து எழுந்தருளி விநாயகப்பெருமான் திருத்தேர்களுடன் வீதியுலா வருவதைக் காணில் கவலைகள் எல்லாம் பறந்தோடிவிடும். இந்தக் காட்சிகளைச் சொல்லோவியமாக வர்ணிக்கமுடியாது. அம்பிகையை நேரில் வந்து தரிசித்தால்தான் அம்பிகையின் மகத்துவம் விளங்கும்.

**தெய்வீகத் திருத்தேர்**

அம்பிகையின் திருத்தேர் மிகவும் சிறப்பானமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அம்பிகையின் சரித்திர வரலாறுகள் பல இந்தத் திருத்தேரில் செதுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக போர்த்துக்கீசர்கள் கோயிலை இடித்தல், அப்பொழுது நயினைமக்கள் அம்பாளை மேற்குக் கடற்கரையிலுள்ள ஓர் ஆலமரப்பொந்தில் ஒளித்துவைத்தல், அம்பிகையின் தேர் கடலுக்குள் உருண்டு சென்றமை, 'நயினாப்பட்டர்' என்ற அந்தணர் அம்பாளுக்குப் பூஜை செய்தது போன்ற பல சான்றுகள் தேரில் பொறிக்கப்பட்டுள்ளன. இவை அம்பிகையின் மகத்துவத்தை அடியார்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றன. அன்னையவளின் அருளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆறாத பக்தியினால் அடியார்கள் கவரப்பட்டு நயினையம்பதியின் சப்பறத் திருவிழாவன்றே பெருமளவில் கூடுவார்கள். அன்று இரவுமுழுவதும் அம்பிகையின் சப்பறத் திருவிழாவினைக் கண்டு களித்து, நல்லருளைப்பெற்று, தேர்த்திருவிழாவன்று அதிகாலையிலும் அடியார்கள் பெருமளவில் கூடுவார்கள்.

**நயினையம்பதியின் விழாக்கோலம்**

விழாக்கோலம் பூண்டிருக்கும் 'நயினையம்பதி' 'இந்திர லோகம்' போலக் காட்சியளிக்கும் தேர்த்திருவிழாவன்று விடியற்காலையிலேயே அடியார்கள் அம்பிகையின் ஆலயத்தில் கூடிவருவார்கள். அடியார்கள் பலர் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும்பொருட்டு அங்கப் பிரதட்சணம் செய்துகொண்டும் அடியழித்துக்கொண்டும் வீதிவலம் வருவார்கள். கோயில் வீதிகள் எங்ஙணும் பக்திமயமாகவே காணப்படும். அதிகாலையிலே பூஜைகள், அபிஷேகம்,வசந்த மண்டபப் பூஜைகள் முதலியன நேரக்கிரமம் தவறாது நிறைவேற்றப்பட்ட பின்னர் அன்னை பராசக்தி தேரேறி வீதி உலாவருவதற்கு புறப்படுவாள். பஜனைக் கோஸ்டிகள் ஒருபுறம், கற்பூரச்சட்டி ஏந்தும் பெண்கள் ஒருபுறம் இப்படியாக அடியார்கள் பக்திக்கோலத்துடன் தேர் வீதி உலாவரும் போது தேரின் பின்னால் வருவதை அற்புதக்காட்சியெனலாம்.
அம்பிகையின் தேர்வடம் பிடித்தால் மிகப்பெரும் புண்ணியமாகும். வடம் பிடித்தவர்கள் அம்பிகையின் திருவடியில் இடம்பிடித்தவர்கள் இதனால் அடியவர்கள் தேரின் வடம் பிடிப்பதற்காக முந்திக்கொள்வதை நான்கு வீதிகளிலும் காணலாம்.
அம்பிகையைத் தரிசிக்கவருகின்ற பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு 'அமுதசுரபி' அன்னதான சபையினர் அன்னதானம் வழங்குகின்றார்கள். அம்பிகையின் அருள் சுரக்க அமுதும் சுரந்தும் வருடந்தோறும் அமுத சுரபியின் சேவை சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. முழு நம்பிக்கையோடு வழிபடும் அடியார்களது கவலைகளையும் நோய் பிணிகளையும் நீக்கி அருளும் பேரருட்சக்தியாகவே ஸ்ரீ நாகபூசணி அம்பாள் விளங்குகின்றாள் என்றால் அது மிகையல்ல.

## நாகபூசணியே நல்லருள் நல்கிடம்மா

*அம்பிகையே அபிராமி வல்லியே*
*ஆனந்த சொருபியே அமுதசுரபியே*
*உம்மையே நம்பி உன்னடி வந்தோம்*
*உமையாயே உள்ளம் உருகிடம்மா.*
*செம்மணச் செல்விக்கு உதவிய ஈசனார் போல்*
*செம்மணிப் புதைகுழிக்கு செங்கோல் நாட்டிடம்மா*
*நம் தமிழினமும் வாழ ரதமேறும் தாயே*
*நயினை நாகபூசணியே நல்லருள் நல்கிடம்மா*

*இ.டீ ஜேஸ்சன்*
*கோண்டாவில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செம்மணி:

## அமைதிப்பெருவெளியில் விளைந்த சடலங்கள்



■ பொன்னையா சிந்துயன்
சட்டத்துறை இறுதியாண்டு மாணவன்
இங்கிலாந்து

யாழ்ப்பாணத்தின் வாசலாக உள்ள செம்மணி அமைதியான உறங்கும் ஒரு பெருவெளி. ஆனால் இன்று அந்த அமைதியான பெருவெளி சர்வ தேச சமூகமே திரும்பிப் பார்க்கும் அளவுக்கு பயங்கரங்களைக் கொண்ட மனிதப்புதைகுழியாக மாறியுள்ளது. நிலத்தில் தோண்ட தோண்ட மனித எலும்புக்கூடுகள் வந்துகொண்டே இருக்கின்றன. குட்டிக் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை குடும்பம் குடும்பமாக இருந்தவர்கள் ஆண், பெண் பேதமில்லாமல் சித்திரவதை செய்யப்பட்டு, வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டு , கைகள் கட்டப்பட்ட நிலையில், வாய்கள் பிளந்த நிலையில் எலும்புக்கூடுகளாக மீட்கப்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

செம்மணிப் புதைகுழியின் கோரம் 1996 ஆம் ஆண்டு இடம் பெற்ற கிருசாந்தி குமாரசாமி வழக்கின் பின்னேதான் வெளியுலகுக்கு தெரியவந்தது. 1996 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 7 ஆம் திகதி செம்மணியில் உள்ள சோதனைச் சாவடியில் 18 வயதேயான மாணவியான கிருஷாந்தி இலங்கை இராணுவத்தால் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார். அவரது தாயார், தம்பி மற்றும் உறவினர் ஆகியோர் அவரைத் தேடிச் சென்ற போது அவர்களும் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். நான்கு உடல்களும் பின்னர் செம்மணியில் குழிதோண்டிப் புதைக்கப்பட்டன. பின்னர் கிருஷாந்தி குடும்பத்தின் கதியை அறிய அவர்களின் உறவினர்கள் கொடுத்த அழுத்தங்களால், விசாரணைகள் ஆரம்பித்து அவர்களது உடல்கள்மீட்கப்பட்டன. ஆயினும் சில மணித்தியாலங் களுக்குள் அவற்றை எரிக்க வேண்டுமென படைத்தரப்பு நிபந்தனை விதித்தது.


கிருஷாந்தி கொலைவழக்கில் ஜூலை 1998 இல் சோமரத்தன ராஜபக்சஉட்பட ஒன்பது படையினர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட போதுதான் கிருஷாந் தியினதும் அவரது குடும்பத்தினரும் சடலங்களைப் போல நூற்றுக்கணக்கான தமிழ் மக்களின் சடலங்கள் செம்மணிக்குள் புதைக்கப்பட்ட உண்மை வெளி வந்தது.

'நான் யாரையும் கொல்லவில்லை . மேலதிகாரிகளால் கொல்லப்பட்டவர்களின் உடல்களை மட்டுமே புதைத்தேன். செம்மணியில் 2 00 முதல் 400 பேர் வரை புதைக்கப்பட்ட இடங்களை தன்னால் அடையாளம் காண்பிக்க முடியும்' என சோமரத்தன ராஜபக்ச என்ற குற்றவாளி வழங்கிய வாக்குமூலம் உலகையே உறையவைத்தது. இந்த ஒப்புதல் வாக்குமூலம் மனித உரிமை குழுக்களும், தமிழர்களும் பல ஆண்டுகளாக பேசி வந்த விடயத்தை உறுதிப்படுத்தியது.

1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 600 பேர் வரை காணாமல் போனார் கள் எனவும், அவர்களின் உடல்கள் கழிவறை, பயன்படுத்தப்படாத கிணறு கள் மற்றும் ஆழமற்ற புதைகுழிகள் ஆகியவற்றில் மூடிமறைக்கப்பட்டதாக சர்வதேச மன்னிப்புச் சபை இதற்கு முன்னரே அறிவித்திருந்தது. சோமரத்ன ராஜபக்சவின் இந்தச் சாட்சியம் தமிழ் மக்களும், பொது அமைப்புகளும் சந்தே கப்பட்டது சரியென உணர்த்தின. வருடக்கணக்கில் கிருஷாந்தி கொலைவழக்கு இழுத்தடிக்கப்பட்டு, இறுதியில் குற்றவாளிகளுக்கு மரணதண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. இந்தநிலையில் எல்லோரின் நினைவுகளில் இருந்தும் செம்மணிப்புதைகுழி விடயம் தேய்ந்து போய்விட்ட நாளொன்றில்தான் மீண்டும் அதுபேசுபொருளானது. அப்படிப் பேசுபொருளாக்கியது அங்கே சித்துப்பாத்தி மயானத்துக்கான மதில்கட்டுவதற்கென வெட்டப்பட்ட குழிக்குள் இருந்து வெளிப் பட்ட எலும்புச் சிதைவுகள் தான்.

அதன்பின்னர் அந்தப் புதைகுழியின் அகழ்வுப்பணி தொடங்கிய பின்னர் இதுவரை 50 க்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றில் குழந்தைகளினதும், பெண்களினதும் எலும்புக்கூடுகளே அதிகம் என்றும் சொல்லப்படுகின்றது. அதைவிட பொம்மைகள், பாடசாலைப் புத்தகப்பை, சில ஆடைகள் , காலணி என்பனவும் மீட்கப்பட்டுள்ளன. இங்கு மீட்கப்படும் எலும் புக்கூடுகளின் சாவுகளுக்கு காரணமானவர்கள் சிறிலங்காப் படையினரும், சிங்கள ஆட்சியாளர்களுமே என்பதில் எவ்வித ஐயமுமில்லை. செம்மணிப் புதைகுழியின் வெம்மையை உலகெங்கும் எடுத்துரைக்கும் வகையில் இடம் பெற்ற 'அணையாவிளக்கு' போராட்டம் இன்னமும் அந்தப் புதைகுழிகளின் மீதான கவனத்தை திருப்பியுள்ளது. அதனால் சர்வதேச மட்டத்தில் இலங்கை மீதான கோபப்பார்வை அதிகரித்திருக்கும் தருணத்தில், செம்மணியால் உண் டான அதிர்வுகளை மடைமாற்றும் வேலையில் சில புல்லுருவிகள் இறங்கி இருக்கின்றனர். குறிப்பாக துணுக்காயில் புலிகளின் வதைமுகாம் ஒன்று 1990 இல் இயங்கியதாகவும், அங்கு ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்ட தாகவும் பெண்ணொருவர் சமூகவலைத்தளங்களில் வீடியோ ஒன்றைப்பதிவிட, அதனை சிங்கள இனவாதிகள் பகிர்ந்து வருகின்றனர். அந்த வீடியோவை வெளியிட்ட பெண்ணின் பின்புலம் தெரிந்தோருக்கு இதுவொரு விசமத்தன மான வீடியோ என்பது புரிந்துவிட்டது. ஏனெனில் அவரது கணவர் என்று அடை யாளப்படுத்தப்படும் நபர் இராணுவப்புலனாய்வுப்பிரிவோடு இயங்குபவர். சாதி பேதங்களை தமிழ் மக்களிடையே உருவாக்கி, அதில் குளிர்காய நினைக்கும் அதிகாரத்தரப்புக்கு வால்பிடிப்பவர். அப்படிப்பட்டவரோடு இருக்கும் பெண்ணும் அதேவேலையைத்தானே செய்வார். அத்துடன் குறித்த பெண் துணுக்காயில் புலிகளின் வதைமுகாம் 1990 ஆம் ஆண்டு இயங்கியதாகச் சொல்கிறார். ஆனால் வேடிக்கை என்னவென்றால், அந்தக் காலகட்டத்தில் துணுக்காயில் இந்தியப்படையினரே நிலைகொண்டிருந்தனர். அதனால் அவரது வீடியோ திட் டமிட்டு உருவாக்கப்பட்ட புனைவு என்பது எல்லோருக்கும் தெளிவாகிவிட்டது.

இவர்களை விடவும் சில அரசியல்வாதிகளும், புத்திஜீவிகள் என்று சொல்லிக் கொள்வோரும் கூட செம்மணியின் வீரியத்தை திசைதிருப்ப பல்வேறு தகிடுதத் தங்களில் ஈடுபட்டு வருகின்றனர். . "எதிரிகளை பிறகு பார்த்துக் கொள்ளலாம் முதலில் துரோகிகளையே ஒழிக்க வேண்டும்" என்று சொல்வார்கள். தமிழ் மக் கள் அனைவரும் இணைந்து போர்க்குற்றங்களை புரிந்த , செம்மணிப்படுகொ லைக்குகாரணமானசிறிலங்காப் படையினரையும், சிங்களப் பேரினவாதத்தின் அப்போதைய ஆட்சியாளர்களுக்கும் தண்டனையைப் பெற்றுக்கொடுப்பதற்கான அத்தனை நடவடிக்கைகளையும் விரைந்து எடுப்பது காலத்தின் கட்டாயமாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம் முற்றோதல்

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் மாதாந்தத் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு பூரணை நாளான நாளை வியாழக்கிழமை காலை 6மணி முதல் மு.ப. 11 மணி வரை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் அனைத்து அடியவர்களையும் கலந்துகொள்ளுமாறு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் அறிவித்துள்ளார்.

(ச-41-66)

## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ்ப்பாணம் நெல்லியடியில் இயங்கிவரும்
சைவ உணவகம்

- றொட்டி வேலை
- சமயல் வேலை

ஆட்கள் தேவை
சம்பளம் நாள் ஒன்றுக்கு 4000/-
தங்குமிடம் உணவு இலவசம்
தொடர்புகளுக்கு:-

**076 992 6401**

## கண்ணீர் அஞ்சலி



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் உப அதிபர்
**திருமதி சத்தியா றஞ்சிற்**
அவர்களின் பாசமிகு மாமியார்
**கமலலக்சுமி அருளானந்தம்**
அவர்கள் நேற்று 08.07.2025
செவ்வாய்க்கிழமை காலமானார் .
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திப்பதுடன் குடும்பத்தாரின் துயரிலும்
பங்குபற்றுகின்றோம்.

தோற்றம் 21.04.1933 மறைவு 08.07.2025

விரிவுரையாளர் கழகம்
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்.

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
## உப அலுவலகம் - நீர்வேலி
### ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்
### வட்டாரம் 2, கம்பன் தோண்டி ஒழுங்கை, ஆதன இலக்கங்கள் - (6.8,10)

சொந்தக்காரர். உ. கோ: இராசா பெண் செல்வமணி எனவும். ஆதன இலக்கம் - 08 ஆனது V. தம்பிராஜா உ.கோ: இரவீந்திரன் பெண் கலியுகவரதராணி எனவும் ஆதன இலக்கம் - 10 ஆனது சொந்தக்காரர் உ.கோ: இராசபெண் செல்வமணி எனவும் ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

ஆதன இலக்கம் - 06.10 இற்குரிய இரண்டு ஆதனங்களும் ஆதன இலக்கம் - 08 இற்குரிய ஆதனத்தின் ஒரு பகுதியும் இராசா செல்வமணி மறுநாமம் அப்புக்குட்டி நடராசா மகள் செல்வமணி என்பவரால் தனது பேரனான கறுப்பர் வையிரவிப்பிள்ளை என்பவருக்கு சொந்தமாக இருந்து அவரது மகளும் தனது தாயாருமாகிய அப்புக்குட்டி நடராசா பெண் இராசம்மாவிற்கு வந்தது என்றும் அவரின் ஒரே மகள் தான் என்பதால் தாய்வழி முதுசமாக தன்னை வந்தடைந்தது என்றும் ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு மேலாக தனது தங்குதடையற்ற ஆட்சியிலிருந்து வருகின்றது என்றும் நொத்தாரிசு C.N சத்தியநாதன் என்பவரால் எழுதப்பட்ட 328ம் இலக்க 2019.12.25ம் திகதிய உறுதி மூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

**இதன் 1 ம் ஆதன இடாப்பு**

வட மாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று நீர்வேலி இறை கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வலிகாமம் கிழக்கு. பிரதேச சபை எல்லைக் குட்பட்ட J/269 ம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் அமைந்த "தச்சன்புலம்" நில.பர 14 குளி 02.55 இது 2019.11.16 ஆம் திகதி நில அளவையாளர் கே.ஆறுமுகம் தயாரித்த 6265 ஆம் இலக்க நில அளவைப் படத்தில் துண்டு 1.துண்டு 2. துண்டு 3 என சுட்டி விபரித்ததன் நில.பர 14 குளி 02.55. இதில் துண்டு 1 எனச் சுட்டிய நில.பர 6 குளி 12.54. இந்த நிலப்பரப்பு சைபர் ஆறு குளி பன்னிரண்டு தசம் ஐந்து நாலுக்கும் எல்லை. கிழக்கு குறித்த 6265 ஆம் இலக்க படத்தில் துண்டு 2 எனச்சுட்டிய இராசா மகள் கலியுகவரதராணிக்குரிய ஆதனமும் பாதையும் வடக்கு ஆறுமுகம் முத்துச்சாமியின் ஆதனம் மேற்கும் தெற்கும் ஒழுங்கை இதடங்கலும் இன்னும் வடகிழக்கேயுள்ள கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்

**2 ம் ஆதன இடாப்பு**

மேற்படி இறை தச்சன்புலம்" நில பர. 4 குளி 05.55 இந்த நிலப்பரப்பு நான்கு குளி சைபர் ஐந்து தசம் ஐந்து ஐந்துக்கும் எல்லை கிழக்கு தயாளசிங்கம் பவளகேசரியின் ஆதனம் வடக்கு பாதை மேற்கு இராசா மகள் கலியுகவரதராணியின் ஆதனம் தெற்கு ஒழுங்கை இதடங்கலும் இன்னும் வடக்கேயுள்ள கிணற்றில் பங்கும் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும்

எமது ஆதனப்பதிவேட்டில் ஆதன இல - 6 இற்குரிய. மேற்படி 2 ஆம் ஆதன இடாப்பில் குறிப்பிடப்பட்ட 2019.11.16 ஆம் திகதி நில அளவையாளர் கே.ஆறுமுகம் தயாரித்த 6265ம் இலக்க நில அளவைப் படத்தில் துண்டு 3 என சுட்டிய நி.பரப்பு 4 குளி 5.5 இற்குரியதுமான ஆதனத்தினை இராசா பெண் செல்வமணி என்பவர் நீர்வேலி வடக்கு நீர்வேலியைச் சேர்ந்த தனது மகளான இரவீந்திரன் பெண் கலியுகவரதராணிக்கு நொத்தாரிசு C.N சத்தியநாதன் என்பவரால் எழுதப்பட்ட 333 இலக்க 2020.01.12ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் வழங்கியுள்ளார். இவ் ஆதனத்தினை தற்போது இரவீந்திரன் பெண் கலியுகவரதராணி தனது பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார்.

எமது ஆதனப்பதிவேட்டில் ஆதன இல 8 இற்குரிய 2024.09.28 ம் திகதி நில அளவையாளர் வ.தவராஜா தயாரித்த 8 ம் 6577 ம் இலக்க நில அளவைப் படத்தில் துண்டு A என சுட்டிய நி.பரப்பு 4 குளி 7.7 இற்குரியதுமான ஆதனத்தினை தம்பிஐயா இரவீந்திரனும் பெண் கலியுகவரதராணியும் என்பவர்கள் தங்கள் மகளான சின்னத்தம்பி சுந்தரராசன் பெண் ரதீகாவுக்கு நொத்தாரிசு C.N சத்தியநாதன் என்பவரால் எழுதப்பட்ட 609 ஆம் இலக்க 2022.07.14 ஆம் திகதிய சீதன உறுதி மூலம் வழங்கியுள்ளனர். இவ் ஆதனத்தினை தற்போது சின்னத்தம்பி சுந்தரராசன் பெண் ரதீகா தனது பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார்.

எமது ஆதனப்பதிவேட்டில் ஆதன இல - 10 இற்குரிய மேற்படி 1 ம் ஆதன இடாப்பில் குறிப்பிடப்பட்ட ஆதனத்தின் ஒரு பகுதியான, 2024.02.13 ஆம் திகதி நில அளவையாளர் ந.கேதீஸ்வரன் தயாரித்த 5899 ஆம் இலக்க நில அளவைப் படத்தில் துண்டு 1 என சுட்டிய நி.பரப்பு 5 குளி 7 இற்குரியதுமான ஆதனத்தினை நீர்வேலி வடக்கு 5 நீர்வேலியைச் சேர்ந்த இராசா கைம்பெண் செல்வமணி என்பவர் தனது மருமகனான தம்பிஐயா இரவீந்திரன் என்பவருக்கு நொத்தாரிசு C.N சத்தியநாதன் என்பவரால் எழுதப்பட்ட 624 ஆம் இலக்க 2022.09.05 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் வழங்கியுள்ளார். இவ் ஆதனத்தினை தற்போது தம்பிஐயா இரவீந்திரன் தனது பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார்.

எனவே இவை தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எமக்கு அறியத்தர முடியும். அவ்வாறு ஆட்சேபனைகள் இல்லாதவிடத்து அல்லது யாரேனும் உரிமை கோராதவிடத்து ஆதன இல 6 ஆனது ரவீந்திரன் பெண் கலியுகவரதராணிக்கும். ஆதன இல - 8ஆனது சின்னத்தம்பி சுந்தரராஜன் பெண் ரதீகாவிற்கும். ஆதன இல - 10 ஆனது தம்பிஐயா இரவீந்திரன் எனும் பெயரிற்கும். பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ் ஆதனங்களை பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளுக்கும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் அறியத்தருகின்றேன்

**தவிசாளர்**
**வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 . 02 . 1940



மறைவு 20 . 06 . 2024

**அமரர்- சின்னத்தம்பி - குருநாதி**


பாரினிலே எம்மைத் தவிக்க விட்டு
நினைவுகள் மட்டும் நிறையவே
தந்து நிதர்சனமாய் சென்றதேனோ
என்றும் எம் நெஞ்சை
விட்டு அகலாது உங்கள் நினைவுகள்
நீங்கா நினைவுகளுடன் உங்கள்ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

துன்னாலை மேற்கு
கரவெட்டி

நினைவுகளுடன்
பிள்ளைகள்-மைனாவதி,
மலர்விழி, முருகதாஸ்,
சிவதாஸ், மான்விழி, குகலன்,
மற்றும் மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 30ஆவது ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 19 . 01 . 1979



இறப்பு 09 . 07 . 1995

**செல்வராசா பிரதீஸ் (பிரசாத்)**

முப்பது ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
உம்மை நாம் மறப்போமா
இளம் வயதில் எம்மைப் பிரியாது
பெருந் துணையாய் இருந்தீரே
கணப் பொழுதில் எம்மைப் பிரிந்து
விண்ணுலகம் சென்றீரே
முபத்து ஆண்டு உருண்டாலும்
வலியின் வாசம் மட்டும்
எம்மை விட்டு விலகவில்லை
குடும்ப உறவுகள் உம்மை நினைத்து
கண்ணீர் சிந்துகின்றோம் எம் மனதில்
என்றும் நீர் நிலைத்திருப்பீர்
உன் ஆத்ம சாந்திக்காக இறைவனை
வேண்டுகிறோம்

கலையரசு வீதி
நவாலி தெற்கு
மானிப்பாய்

(CS 58797) E

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருதிப் புற்றுநோயால் யாழ். மாணவி இறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 9
யாழ்ப்பாணம், கரணவாயைச் சேர்ந்த சுகந்தன் பூமிகா (வயது - 20) என்ற மாணவி, குருதிப் புற்றுநோய் காரணமாக உயிரிழந்துள்ளார்.

மகரகம அபேக் ஷா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்றுமுன்தினம் மாலை அவர் உயிரிழந்துள்ளார். (ம-26)

# கிளிநொச்சி கட்டளைத் தளபதி மாவட்டச் செயலருடன் சந்திப்பு

கிளிநொச்சி, ஜூலை 9
கிளிநொச்சி மாவட்டத்தின் 55ஆம் படைப் பிரிவின் புதிய இராணுவக் கட்டளைத் தள பதியாகப் பதவியேற்றுள்ள மேஜர் ஜெனரல் டபிள்யூ.எம்.ஏ.பி. விஜயகோன், கிளிநொச்சி மாவட்டபதில் செயலர் எஸ்.முரளிதரனை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலக அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் இராணுவக் கட்டளைத் தளபதி கேட்டறிந்து கொண்டார். (ச-41-113)


## Invitation for Bids (IFB)
## VAVUNIYA NORTH PRADESHIYA SABHA, NEDUNKERNY

1 The Chairman, Divisional Procurement Committee (Div.PC), on behalf of Vavuniya North Pradeshiya Sabha, Nedunkerny now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

| S. No | Bid No. | Name of the Work | Estimated Civil Cost (LKR in. Mn) | CIDA Grade Required | Required Bid Security | | Contract Period |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Amount (Rs.) | Validity Period | |
| 1 | PSDG/NP/VAV/VNPS/2025/LAR/02 | Construction of Mathiyamadu Sinnapoovarasankulam Road - VNPS - Stage II | 2.63 | C9 & Above (Highway Construction) | 27,000.00 | 08.10.2025 | 84.0 Days |
| 3 | PSDG/NP/VAV/VNPS/2025/OS/02 | Construction of Toilet and Sockage Pit at Navalar Community Center at Nedunkerny North | 0.44 | C9 & Above (Building Construction) | 5,000.00 | 08.10.2025 | 63.0 Days |
| 4 | PSDG/NP/VAV/VNPS/2025/CWS/02 | Renovation of Existing Open Dug Well at Water Filter Center Nedunkerny | 0.19 | C9 & Above (Building Construction) | 2,000.00 | 08.10.2025 | 63.0 Days |
| 5 | MA/NP/VAV/VNPS/2025/LAR/02 | Renovation of Pot Holes Patching and Sand Sealing at Mathiyamadu Sinnapoovarasankulam Road - Stage II | 0.40 | C9 & Above (Highway Construction) | 5,000.00 | 08.10.2025 | 63.0 Days |

2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
3. Interested eligible bidders may obtain further information from **Chairman, Vavuniya North Pradeshiya Sabha, Nedunkerny [Email: vnpsnk@gmail.com]** from **09.00 Hrs to 15.00 Hrs** and inspect the bidding documents at the address **Chairman, Vavuniya North Pradeshiya Sabha, Mullai Road, Nedunkerny.**
4. Qualification requirements to qualify for contract award is given in "Section 4 of the Qualification Information and Section 5 of the Schedule" of the Procurement Document.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written request to the address **Chairman, Vavuniya North Pradeshiya Sabha, Mullai Road, Nedunkerny from 09.07.2025 until 22.07.2025 from 09.00 Hrs to 15.00 Hrs.** Upon payment of a non-refundable fee of **Three thousand Rupees [Rs 3,000.00]. The method of payment will be by cash.**
6. Bids must be delivered to the address **Chairman, Divisional Procurement Committee, Vavuniya North Pradeshiya Sabha, Mullai Road, Nedunkerny on or before 23th July 2025 and 10.30 Hrs.** Late bids shall be rejected. Bids will be opened in the presence of Bidders' representatives who choose to attend in person or vital at the address same above.
7. All bids must be accompanied by a Bid-Security of an amount and validity date mentioned in the table above.
8. The pre-bid meeting will be held on **16.07.2025 at 10.30 Hrs** at the Vavuniya North Pradeshiya Sabha, Mullai Road, Nedunkerny.
9. The address (es) referred to above is (are):

**Chairman,
Divisional Procurement Committee.
Vavuniya North Pradeshiya Sabha,
Mullai Road, Nedunkerny.
[Telephone No: 024 205314 Fax No: 024 2053684]** 09.07.2025


# ‘போர்களனும் புதைகுழிகளனும்’ கருத்துரை

யாழ்ப்பாணம், ஜூலை 9
சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் மாதாந்த போயா தின நிகழ்வில் நாளை வியாழக்கிழமை பி.ப. 4மணிக்கு இல. 62, கே.கே.எஸ். வீதி கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் "போரும் புதைகுழிகளும்" எனும் தொனிப்பொருளில் கருத்துரையும் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளன. யாழ். பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவன் ஜெ.ஜாதுசன் கருத்துரை வழங்குவார்
கருத்துரை முடிவில் சபையோர் கலந்துரையாடல் இடம்பெறும். சமூக விஞ்ஞான அரசியல் கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம் அழைப்பு விடுத்துள்ளது. (ச-66)

# காத்தவராயன் சிந்துநடைக்கூத்து

யாழ்ப்பாணம், ஜூலை 9
இணுவைத் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் இணுவில் இளந்தொண்டர்சபை மற்றும் சண்நாடகக் குழு ஆகியன இணைந்து நடத்தும் காத்தவராயன் சிந்துநடைக்கூத்து மற்றும் முட்டை சிறுவர் நாடகம் ஆகிய நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை மாலை 5.30 மணியளவில் இணுவில் அறிவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.
நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-41-66)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 9
நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணப் படனத்தொடரின் 30ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30மணிக்கு இடம்பெறவுள்ளது. சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள நிகழ்வில் கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்கள் ஆசியுரையையும் பரிபாலனசபைத் தலைவர் சி. தயாநாதன் தலைமையுரையையும், இளஞ்சைவப்புலவர், பிரசங்கச் சுடர் க. கயிலைவாசன் " மார்க்கண்டேயப் படலம் " எனும் விடயப்பொருளில் சிறப்புச் சொற் பொழிவையும் ஆற்றுவர். சொற்பொழிவிலிருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-41)

★★★★★

யாழ்ப்பாணம், ஜூலை 9
தெல்லிப்பழை மாவை கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடற் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடற் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர்-13 நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.
பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், இளஞ்சைவப்புலவர் பிரசங்கவாரிதி ச. நவநீதனின் "வேதத்துக்குப் பொருளருளிச் செய்தபடலம் " எனும் சொற்பொழிவும், இடம்பெறவுள்ளன. சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முழங்கால்...

இந்த என்புத் தொகுதி, செம்மணிப் புதைகுழியில் 55ஆவது என்புத் தொகுதியாக அவதானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## செம்மணிப்...

எண்ணிக்கை 56ஆக அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணம் - செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பான இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகளின் பதின்மூன்றாம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்றைய தினம் இடம்பெற்றன. இதன்போதே நான்கு என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றுடன் சேர்த்தால் செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 56 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதுவரை 50 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் ஆணையாளர் மிராக் ரஹீம், காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சிரேஸ்ட சட்டத்தரணி ஞா.ரணித்தா, முறைப்பாட்டாளர் தரப்பின் சார்பில் சட்டத்தரணி க.சுகாஷ், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினர் ஆகியோர் நேற்றைய அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## செவ்வந்தியை...

உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க. நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் இன்று பொதுமக்களுக்கு பாதுகாப்பு இல்லை. நீதிமன்றத்தில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய செவ்வந்தி என்ற யுவதி நாட்டை விட்டுச் செல்லவில்லை, இங்குதான் இருக்கின்றார் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கூறுகின்றார்.

இலங்கையென்பது சிறிய நாடு. பிரபாகரனையே கண்டுபிடிக்க முடிந்தது எனில், செவ்வந்தியை ஏன் கண்டுபிடிக்க முடியாமல் உள்ளது?

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு ஒரு மாதகாலம் அவகாசம் வழங்குகின்றோம். செவ்வந்தியைக் கைதுசெய்து காட்டுங்கள். நீதிமன்றத்துக்குள் துப்பாக்கியைக் கொண்டு சென்றமை, துப்பாக்கிதாரிக்கு பயிற்சி அளித்தமை உள்ளிட்ட செயல்களில் ஈடுபட்ட செவ்வந்தியே பிரதான சூத்திரதாரி. அவர் கைது செய்யப்பட வேண்டும். நாட்டில் இன்று நாளாந்தம் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் இடம்பெறுகின்றன. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பொறுப்புடன் செயற்பட வேண்டும்' - என்றார். (அ-ம-44)

## விசாரணைகள்...

கள் தொடர்பிலும் விளக்கம் கோரப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடியது. இதன்போது, தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நஜித் இந்திக, 2011ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் காணாமலாக்கப்பட்ட லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகாநந்தன் ஆகிய இருவர் தொடர்பிலான விசாரணைகள் எந்த மட்டத்தில் உள்ளன? என்று வினவினார்.

இதற்கு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்ததாவது:-

2011ஆம் ஆண்டு டிசெம்பர் 9ஆம் திகதி லலித் குமார் வீரராஜ், குகன் முருகானந்தம் ஆகியோர் காணாமலாக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்துக்கு 2011ஆம் ஆண்டு டிசெம்பர் 12ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்குத் தொடர்பில் 17 சந்தர்ப்பங்களில் அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேலதிக தகவல்களை வழங்கியுள்ளார். இறுதியாக 2014ஆம் ஆண்டு ஒக்ரோபர் 10ஆம் திகதி நீதிமன்றம் கூடியவேளை, வழக்கு கிடப்பில் போடப்பட்டது.

இதுதொடர்பான விசாரணைகளில் முன்னேற்றம் இல்லாமையால், விசாரணைகளை முன்னெடுக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபரால் 2025ஆம் ஆண்டு ஜூன் 3ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்குத் தேவையான உத்தரவுகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அதே திகதியில் வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் அனுப்பட்டது. அச்சுவேலி பொலிஸ் நிலையத்தாலும், யாழ்ப்பாணக் குற்றத்தடுப்பு பிரிவினராலும் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், தற்போது மேலதிக விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-44)

## பொலிஸ்...

விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நீதிமன்றம் கட்டளையிட்டது.

வவுனியா ஓமந்தையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், சமூக வலைத்தளங்களில் பிரபலமாவதற்காக பல்வேறு சர்ச்சையான வீடியோக்களை அண்மைக்காலமாக வெளியிட்டு வந்திருந்தார். அவருக்கு எதிராக பொது அமைதிக்கு பங்கம் விளைவித்தல், சட்டத்துக்கு புறம்பான செயல்களைச் செய்தல் என்ற குற்றச்சாட்டுகளின் கீழ் மன்னார் நீதிவான் நீதிமன்றில் மடு பொலிஸார் நேற்று 'பி' அறிக்கை தாக்கல் செய்தனர்.

வழக்கு மன்னார் நீதிமன்ற மேலதிக நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு ஆதரவாக மன்னார் சட்டத்தரணிகள் முன்னிலையானதுடன் சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி எவரும் முன்னிலையாகவில்லை. பொலிஸாரின் சமர்ப்பணத்தைப் பரிசீலித்த நீதிமன்றம், சந்தேகநபரான இளைஞரை எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

குறித்த நபர் மீது பல்வேறு குற்றவியல் வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. அவற்றிலும் அந்த இளைஞர் முன்னிலையாகத் தவறியிருந்தார். இதனால், சந்தேகநபருக்கு எதிராக 25க்கும் மேற்பட்ட பிடியாணை உத்தரவுகள் உள்ளன. இந்த விடயத்தையும் நீதிமன்றத்தின் கவனத்துக்குப் பொலிஸார் கொண்டு சென்றனர்.

இதைக் கவனத்திலெடுத்த நீதவான், பிணைக் கட்டளைச் சட்டம் 14ஆம் பிரிவின் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட அனைத்துப் பிணைகளையும் இரத்துச் செய்தும் உத்தரவிட்டார். (அ-ம-26)

## விகாரை...

அதனைச்சுற்றி வேலி அமைக்க முற்பட்டுள்ளனர். விகாரையொன்று அமைப்பதற்காகவே, இவ்வாறு வேலி அமைக்க முயற்சித்ததாகக் கூறப்படுகின்றது. இதையடுத்து, அங்கு கூடிய அரசியல்வாதிகள், பொதுமக்களால் பொலிஸாரின் முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த காணிக்குள் எவ்வித கட்டுமானங்களோ அல்லது அபிவிருத்திப் பணிகளோ முன்னெடுக்கப்படக்கூடாது என்று ஓமந்தை பொலிஸாருக்கு பிரதேச செயலாளரால் எழுத்து மூலமான கடிதம் அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-110)

## நாகபூஷணிக்கு..

வும் பக்திபூர்வமாக நடைபெறவுள்ளது.

இன்று அதிகாலை 4 மணியளவில் காலைப் பூசை, அதிகாலை 4.30 மணியளவில் கும்ப பூசை, அதிகாலை 5.30 மணியளவில் விசேட பூசை, காலை 6 மணியளவில் தம்ப பூசை, காலை 7 மணியளவில் வசந்தமண்டபப் பூசை, காலை 8.30 மணியளவில் நாகபூஷணி அம்மன் சித்திரத் தேரில் ஆரோகணித்தல், காலை 9 மணியளவில் அம்மன் திருத்தேரில் வீதி உலா என்பன நடைபெறும். அதனைத் தொடர்ந்து இன்று மாலை 4 மணியளவில் பச்சை சாத்தி சித்திரத் தேரிலிருந்து நாகபூஷணி அம்மன் அவரோகணம் செய்யும் திருக்காட்சி இடம்பெறுமென மேற்படி ஆலய அறங்காவலர் சபையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நாளை வியாழக்கிழமை காலை 7 மணியளவில் வசந்தமண்டபப் பூசையும், காலை 7.30 மணியளவில் நாகபூஷணி அம்மன் ஆலயத்திலிருந்து தீர்த்தமாடப் புறப்பட்டுக் கங்காதரணியில் தீர்த்தோற்சவமும் இடம்பெறுமென ஆலய அறங்காவலர் சபையினர் தெரிவித்துள்ளனர். (அ-ம-66)

## பொலிஸாருக்கு...

வடக்கு மாகாணத்தில் மணல் விநியோகத்தைச் சீராக்குவது, சுண்ணக்கல் அகழ்வு மற்றும் விநியோகத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுத்திட்டங்கள் மற்றும் அரசாங்க திணைக்களங்களால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களுக்கே மணலை அதிக விலையில் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை இருப்பது தொடர்பில் குறிப்பிட்ட ஆளுநர், இது தொடர்பில் மீண்டும் மீண்டும் ஆராய்ந்து கொண்டிருக்காமல் முடிவு எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

இதற்கு அமைவாக, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் சில ஆற்றுப்படுக்கைகள், குளங்களிலிருந்து மணலை கழுவி எடுத்துப் பயன்படுத்த முடியும் என்பதுடன் அதற்கான இடங்களை விரைவாக அடையாளப்படுத்துமாறும், உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்பில் 'யாட்' அமைத்து அங்கிருந்து நியாய விலையில் விநியோகம் நடைபெறுவதை உறுதிப்படுத்தும் பொறிமுறையை உடனடியாக ஆரம்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்தில் கல்மடுக் குளத்தில் ஏற்கனவே கழுவி எடுக்கப்பட்ட மணல் கரைச்சிப் பிரதேசசபை ஊடாக விநியோகிக்கப்படவுள்ளமை தொடர்பிலும் கலந்துரையாடலில் தெரியப்படுத்தப்பட்டது.

இதேவேளை சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் ஒப்பந்தகாரர்கள் மற்றும் மாவட்டச் செயலர்கள் சுட்டிக்காட்டினர். ஒரு சில பொலிஸாருக்குச் சொந்தமான டிப்பர் வாகனங்களும் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன என்றும் அதன் காரணமாகவே இதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை இருப்பதாகவும் தெரியப்படுத்தப்பட்டது. மக்களுக்கு நியாயமான விலையில் மணல் தாராளமாக கிடைப்பதை உறுதி செய்வதன் ஊடாக இதனைக் குறைக்க முடியும் என ஆளுநர் குறிப்பிட்டார். அதற்கு உடனடியாக பிரதேச சபைகள் ஊடாக 'யாட்' அமைத்து விநியோகத்தை ஆரம்பிப்பதற்கு ஏதுவாக மாவட்டச் செயலர்கள் தமது மாவட்ட மட்டத்தில் கலந்துரையாடல்களை நடத்துமாறும் ஆளுநர் பணித்தார்.

மணல் அகழ்வுக்குரிய இடத்திலிருந்து குறிப்பிட்டளவு தூரத்தில் 'யாட்' அமைக்கப்படுவதுடன் அதற்காகப் பயன்படுத்தப்படும் டிப்பர்களுக்கு 'ஜி.பி.எஸ்.' கருவிகள் பொருத்தி கண்காணிக்கவேண்டும். மேலும் மணல் அகழ்வுக்கு எத்தனை நாள்கள் என்பது ஒதுக்கப்பட வேண்டும். இதன்மூலம் மணல் அகழ்வு நடவடிக்கையை முழுமையாகக் கண்காணித்து கட்டுப்படுத்த முடியும் என யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் ம.கபிலன் குறிப்பிட்டார். ஆளுநர், மாவட்டச் செயலர்கள், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் உள்ளிட்ட திணைக்களத் தலைவர்கள் இந்த யோசனையை ஏற்றுக்கொண்டனர். கொள்கை ரீதியாக நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் அமைச்சருமான இ.சந்திரசேகரன் ஊடாக அமைச்சரவைக்கு இந்த யோசனை சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவைத் தீர்மானமாக இதனை நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் ம.கபிலன் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் ம.கபிலன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர், வடக்கு மாகாண நீர்பாசனத் திணைக்களப் பணிப்பாளர், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் மாவட்டச் செயலாளர்கள், கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் பிராந்திய பொறியியலாளர், வடக்கு மாகாண கட்டடங்கள் திணைக்களப் பணிப்பாளர், ஒப்பந்தகாரர்கள் சங்க நிர்வாகத்தினர் ஆகியோர் பங்கேற்றனர். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**வெல்டிங் வேலையாள் தேவை**
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள
வெல்டிங் கடை ஒன்றிற்கு அனுபவம்
வாய்ந்த வேலையாள் தேவை
மதிய உணவு வழங்கப்படும்
**சம்பளம் : நாள் ஒன்றிற்கு 4,000/=**
மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்
**077 937 0000, 075 988 1000**

# யாழ்.பல்கலை சட்டத்துறை ஆண்டுநிறைவுநிகழ்வு

**யாழ்ப்பாணம், ஜூலை 9**

யாழ்.பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை ஆரம்பிக்கப்பட்டு இருபது ஆண்டுகள் பூர்த்தியானதையொட்டி பல்கலைக்கழக சட்டத்துறையின் ஏற்பாட்டில் விசேட நிகழ்வொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில்இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர்நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம்.டி.நவாஸ், கௌரவ விருந்தினராக சட்டத்தரணி மாலா சபாரத்தினம் மற்றும் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா, யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம், யாழ்.மாவட்டச் செயலாளர் மருதலிங்கம் பிரதீபன், யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கோசலை மதன், நீதிபதிகள், சட்டத்தரணிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், சட்டத்துறை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இதன்போது யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை தொடர்பான ஆவணப்படமொன்று வெளியிடப்பட்டது. (ச-41-20)



நாவற்குழி மருதடி நெணியன்பதி நரசிங்க வைரவர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவத்தின் 108 சங்காபிஷேக உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து திருவூஞ்சல் பாட்டுப் பாடிய பின்னர் உள்வீதியுலாவும் முத்துச் சப்பறத்தில் நரசிங்க வைரவர் பெருமானின் வெளிவீதியுலாவும் இடம்பெற்றன. (எ-159)






# திசைமுகப்படுத்தல் நிகழ்வு

**யாழ்ப்பாணம், ஜூலை 9**

அச்சுவேலி மத்திய கல்லூரியின் க.பொ.த. (உயர்தர) -2027மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு கல்லூரி முதல்வர் நா. மகேந்திரராஜா தலைமையில் கடந்த 30ஆம் திகதி தொடக்கம் கடந்த வியாழக்கிழமை வரை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வு மாணவர்கள் உயர்தரக்கல்வியின் அடித்தளத்தில் நிலைபெறவும், எதிர்காலத்திற்கான தெளிவான பாதைத் தேர்வை மேற்கொள்ளவும் வழிகாட்டும் நோக்கில் இடம்பெற்றது. (ச-41)




# பசுமை அமைதி விருதுகள் வழங்கும் விழா

**யாழ்ப்பாணம், ஜூலை 9**

மாணவர்களிடையேயும், பொதுமக்களிடையேயும் சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களைச் சூழல் பாதுகாப்புச் செயற்பாடுகளில் பங்கேற்பாளர்களாக்கும் நோக்குடன் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் புலம்பெயர் தமிழர் கூட்டமைப்பின் அனுசரணையுடன் நடத்திய பசுமை அமைதி விருதுகள் வழங்கும் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த விழாவில் மாணவர்களிடையே அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட சூழல் பொது அறிவுப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் முதல் 250 மாணவர்கள் பசுமை அமைதிச் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இவர்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வெற்றியாளர்களுக்குச் சூழலியல் ஆசான் க.சி.குகதாசன் ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதுகள் வழங்கப்பட்டன. முதலாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ரூபிகா அருந்தவம் ஒரு பவுண் எடையுள்ள தங்கப் பதக்கமும் இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ்.மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த கனிவிழி சுதாஜி வெள்ளிப்பதக்கமும் மூன்றாம் இடத்தைப் பெற்ற மட்டக்களப்பு வின்சற் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த டிலுக்சினி டன்ஸ்ரன், மன்னார் சேவியர் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த றித்திக்கா அன்ரன் பிலிப்ஸ், யாழ்.மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த கனிமொழி கணேசானந்தன் ஆகியோர் வெண்கலப் பதக்கங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். தாலகாவலர் மு.க.கனகராசா ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டுவரும் சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளருக்கான விருதை இம்முறை பாக்கியநாதன் சசிக்குமார், பாக்கியநாதன் ராஜ்குமார் ஆகிய இருவரும் பெற்றிருந்தனர். மரநடுகைப் பணியைச் சிறப்பாகச் செய்துவரும் சகோதரர்களான இருவருக்கும் ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசு பகிர்ந்தளிக்கப்பட்டது. (ச-41-66-27)



அச்சுவேலி மத்திய கல்லூரியில் வணிக வாரத்தை முன்னிட்டு வணிகப்பிரிவு மாணவர்களின் ஒழுங்கமைப்பில் மாணவர் சந்தை இடம்பெற்றது. இதன்போது மாணவர்களால் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருள்கள், கைவினைப் பொருள்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டன. (ச-41)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org